Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் -16 | திருவள்ளுவர் ஆண்டு- 2036 | ஆனி-15 | 29-06-2005 | புதன்கிழமை | ஓசை 131



கணேசா நகையகம்

தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்

இல:123. பஜார் வீதி. வவுனியா. T.P.-024-2222464

இல:194. கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம். T.P.-021-2225987

(சி-12120)

# பாதுகாப்பு உடன்படிக்கை எதனையும் சிறிலங்காவுடன் இந்தியா செய்யக்கூடாது!

## சென்னையில் உண்ணாவிரதப் போராட்டம்

**இந்தியா சிறிலங்காவுடன் எந்தவித பாதுகாப்பு ஒப்பந்தத்தையும் செய்யக்கூடாதெனக்கூறி தமிழ் பாதுகாப்பு இயக்கம் தமிழகத்தின் தலைநகர் சென்னையில் நேற்று அடையாள உண்ணாவிரதம் ஒன்றை நடத்தியுள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியும் விடுதலைச்சிறுத்தைகளும் இணைந்து நடத்திய இந்த உண்ணாவிரதத்தை தமிழ்நாடு விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பின் தலைவர் திருமாவளவன் தலைமை ஏற்று நடத்தினார்.**

பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகப் போகின்றது என்ற ரீதியில் அறிவிப்பெதுவும் இதுவரை வராத போதிலும் அதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாகவும் சிறிலங்கா அரசு இதுவிடயமாக இந்திய அரசை வற்புறுத்திவருவதாகவும் செய்திகள் வெளியானதை அடுத்தே தமிழகத்திலுள்ள விடுதலைப்புலிகள் ஆதரவாளர்கள் அதனை எதிர்த்து குரல் கொடுத்துவருவது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை ஏற்கனவே ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வை.கோ.பிரதமர் மன்மோகன்சிங்கை நேரில் சந்தித்து தமது எதிர்ப்பினைத் தெரிவித்துள்ள நிலையில் நேற்று இந்த அடையாள உண்ணாவிரதம் நடைபெற்றுள்ளது.

இந்த உண்ணாவிரதத்திற்கு தலைமைதாங்கிய திருமாவளவன் அங்கு உரையாற்றுகையில்: மத்தியில் எந்தக் கட்சி ஆட்சி செய்தாலும் தமிழ்களின் (12 ஆம் பக்கம் பார்க்க)



கடந்த திங்களன்று வெலிகந்தைப் பகுதியில் 50 விடுதலைப் புலிகள்போராளிகளை இலக்குவைத்து அவர்கள் பயணித்த பேருந்தின்மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதலுக்கு இலக்காகி சேதமடைந்த பேருந்தினை தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், தமிழீழ விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலக பணிப்பாளர் புலித்தேவன், கிளிநொச்சி போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுப் பிரதிநிதி ஆகியோர் பார்வையிடுவதை படத்தில் காணலாம். (படம்-இ.சசி, வீ.தீபன்)

## அரசியல்துறையுடன் பணிபுரிந்தவர் படையினரால் தாக்கப்பட்டார்!

### புலிகள் நேற்று முறைப்பாடு

வவுனியாவில் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறையினருடன் இணைந்து சேவையாற்றும் ஒருவர் படையினரின் தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். இது தொடர்பில் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்ற தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஞானம் இந்தத்தகவலை தெரிவித்தார். (32)

## சனாதிபதி வேட்பாளரை தெரிவுசெய்ய சு.கவின் மத்தியகுழு இரகசிய வாக்கெடுப்பு

### நேற்றிரவு சனாதிபதியுடனான சந்திப்பில் முடிவு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பாக அடுத்த சனாதிபதி வேட்பாளர் யார் என்பதை தீர்மானிக்க கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களிடையே இவ்வாரம் இரகசிய வாக்கெடுப்புபொன்று நடைபெறவுள்ளது இது தொடர்பாக நேற்றிரவு முடிவு செய்யப்பட்டது.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி சார்பு நிலைப்பாட்டை கொண்டிருப்பதால் அவரை புறம்தள்ளி வேறொருவரை சனாதிபதி வேட்பாளராக நியமிக்க வேண்டும் எனப் பிரதியமைச்சர்கள் குழு நேற்றிரவு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து வலியுறுத்தியுள்ளது.

அத்தோடு அவர்கள் அநுரா பண்டாரநாயக்கா சனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யலாம் என்றும் அவருக்கே கட்சியில் அதிக செல்வாக்கு கிடைக்கும் என்றும் நம்புகின்றனர். இந்நிலையில் இவர்களின் பரிந்துரைகளை செவிமடுத்துள்ள சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இரகசிய வாக்கெடுப்பொன்றை நடாத்துவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார் எனத்தெரியவருகிறது. (32)

## சிறிலங்கா பொலிஸ் உத்தியோகத்தர் ஆட்பிணையில் விடுவிப்பு

(திருமலை)

கடந்த 16 ஆம் திகதி கிண்ணியாப் பிரதேச செயலர் பிரிவில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள உப்பாறு பிரதேசத்தினுள் அத்துமீறிப் பிரவேசித்த போது விடுதலைப் புலிப் போராளிகளால் கைது செய்யப்பட்டு சம்பூரிலுள்ள தமிழீழ நீதிமன்றத்தினால் விளக்கமறியலில் வைக்கப்பட்ட,சீனன்குடா பொலிஸ் நிலையத்தில் பணியாற்றி வந்த சிறிலங்கா பொலிஸ் உத்தியோகத்தர் அமல் பிரசன்னா நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## போராளிகளுக்கு பாதுகாப்பு வழங்க சிறிலங்கா அதிரடிப்படை மறுப்பு

### பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாம்

கொக்கட்டிச்சோலையிலிருந்து கஞ்சிகுடிச்சியாறு பிரதேசத்திற்கு பயணம் மேற்கொள்ள இருந்த விடுதலைப்புலிகளுக்கு பாதுகாப்பு வழங்க சிறிலங்கா விசேட அதிரடிப்படையினர் மறுத்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் தளபதிகளில் ஒருவரான ராம் உட்பட 19 பேருக்கு அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினூடாக செல்வதற்கு பாதுகாப்பு வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை விசேட அதிரடிப் படையினர் நிராகரித்துள்ளனர். விடுதலைப்புலிகள் பயணம் செய்வதற்கான பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனிக்குமாறு கூட்டுப்படைத் தலைமையகத்தினாலேயே விசேட அதிரடிப் படையினருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. கண்காணிப்புக்குழுவிடமும் அரச சமாதான செயலகத்திடமும் விடுதலைப்புலிகள் விடுத்த வேண்டுகோளுக்கு அமையவே கூட்டுப்படைத் தலைமையகம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.இல் காணாமற் போனோர் தொடர்பாக வடக்கு-கிழக்கு ம.உ.செயலகம் விசாரணை

### -தகவல் தரவும் வேண்டுகை

(அலுவலக செய்தியாளர்)

வடக்கு-கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் நியமிக்கப்பட்ட குழு யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது

இக்குழு கடந்த சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் யாழ். மண்டைதீவுப் பகுதி மக்களைச் சந்தித்து அங்கு காணாமற் போனோர் தொடர்பாக விசாரணைகளை நடத்தியது. இதன்படி 1990 ஒகஸ்டிலிருந்து செப்ரெம்பர் வரை மண்டைதீவு, அல்லைப்பிட்டி, மண்கும்பான் ஆகிய இடங்களிலிருந்து இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட 62 பேர் இதுவரை காணாமல் போயுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இந்த 62 குடும்பங்களுடனும் தொடர்பு கொண்டு காணாமற் போனோர் தொடர்பான விபரங்களை மனித உரிமை செயலகம் சேகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. எனவே இதுவரை வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலகத்துடன் தொடர்பு கொள்ளாத மேற்படி காணாமற் போனோரின் குடும்பங் (12 ஆம் பக்கம் பார்க்க)

இணையத்தில்.. தேசிய நாளிதழ் ஈழநாதம்

www.eezhantham.com



**வரிவிளம்பரம்**

SPOKEN ENGLISH

A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அடிப்படை இலக்கணத்துடன் பயிற்சி ஆரம்பம:04.07.2005 மாலை 5.மணி இடம்: அன்னை வேளாங்கன்னி ஆலயம் முன்பாக உதயநகர் கிழக்கு. ஆசிரியர் க.யோகன் (BBA&NDE) (6288)


## மடு திருவிழாவை முன்னிட்டு இரவு 10.00 மணிவரை மடுவீதி திறப்பு

மடுத்திருப்பதியின் திருவிழாவை முன்னிட்டு பக்தர்களின் நலன் கருதி இராணுவக்கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து வருபவர்களின் நலன் கருதி மடு வீதி சோதனைச் சாவடி முதலாம் இரண்டாம், மூன்றாம் திகதிகளில் இரவு 10.00 மணிவரை திறந்துவைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் மன்னார் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் செய்துள்ளார்.(18)

## விவசாய கொத்தணி அமைப்பு

(மன்னார்)

மடு பாலம்பிட்டி கமநல கேந்திர நிலையத்தில் பாலம்பிட்டி கமநல கேந்திர நிலைய லிகிதர் தலைமையில் நேற்று மடுப்பிரதேச விவசாய அமைப்புகளுக்கான கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் அண்த்த பகுதிகளுக்கான விவசாய தொழில்நுட்ப அபிவிருத்திக்கான கொத்தணி அமைத்தல் என்ற விடயம் கருத்து கோளாக எடுக்கப்பட்டு கலந்துரையாடப்பட்டதுடன் விவசாய அமைப்புககளை ஒன் றிணைத்து அண்த்துப் பகுதிகளுக் கான விவசாய தொழில் நுட்ப அபிவிருத் திக்கான கொத்தணி அமைக்கப்பட்டது.

## கிணற்றில் வீழ்ந்து சிறுமி மரணம்

(அலுவலகசெய்தியாளர்)

சிறுமி ஒருவர்கிணற்றில் தவறி வீழ்ந்து மரணமானார்.

மேற்படி சம்பவம் நேற்று நண்பகல் 11.00 மணியளவில் கிளிநொச்சி தொண்டமான் நகரில் இடம் பெற்றுள்ளது.

கிரிதரன் கஜேந்தினி (வயது 2) என்ற சிறுமியே கிணற்றில் தவறி விழுந்து மரணமானவராவார்.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் மரண விசாரணையினை மேற்கொண்ட கிளி.மாவட்ட திடீர்மரணவிசாரணை அதிகாரி டாக்டர் கே.வி.கே திருலோகமூர்த்தி விபத்து மரணமென தீர்ப்பு வழங்கியதுடன் பெற்றோரின் கவனயீனமே சிறுமியின் மரணத்திற்கு காரணம் எனத்தெரிவித்துள்ளார். (சோ)


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### சிட்டை ஆய்வாளர் பணிக்கான விண்ணப்பம்கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் சிட்டை ஆய்வாளர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :**

01. கல்வித்தகைமை :- க.பொ.த உயர்தரம் (மூன்று பாடம் சாதாரண சித்தி)
02. அகவை :- 25 தொடக்கம் 40 வரை.
03. உயரம் :- 05 அடி 02 அங்குலம்.

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 13.07.2005
02. சம்பளம் :-

$\frac{3,630-4,730}{10X110}$ + 2,700.00 = 6,330.00 சிறப்புக் கொடுப்பனவு 4,000.00=10,330.00

03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு:- 15.07.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப்படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களிலுள்ள நேரக்கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.12239)



## எழுத்துத் தேர்வு

தமிழீழ வைப்பகத்திற்கு உத்தியோக உதவியாளர் தரம் - 03இல் ஆட்சேர்ப்பதற்கான எழுத்துத்தேர்வு எதிர்வரும் 30.07.2005 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி முதல் 12.00மணி வரை கிளி/புனித திரேசா பெண்கள் கல்லூரியில் நடைபெறும். உரிய பரீட்சார்த்திகளிற்கு அனுமதி அட்டைகள் தபாலில் அனுப்பிவைக்கப் பட்டுள்ளன. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் அருகிலுள்ள தமிழீழ வைப்பகக் கிளைகளில் தங்களது பெயர் விபரங்களைப் பார்வையிடலாம்.

மனிதவள மேலாளர்,
மனிதவளப்பகுதி,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-12243)





# அணுவாயுதத் திட்டத்தை கைவிடமாட்டோம்

# ஐரோப்பிய நாடுகளுக்கு ஈரான் மிரட்டல்

(தெஹ்ரான்)

**ஈரானின் அணுவாயுதக் கொள்கையில் நாங்கள் உறுதியாக இருப் போம். எங்கள் அணுவாயுதத்திட்டம் தொடரும். அதை கைவிட முடியாது. ஐரோப்பிய நாடுகளின் மிரட்டலுக்கு அடிபணியமாட்டோம் என ஈரானின் புதிய அதிபர் முகமதுஅகமதீன் சூளுரைத்துள்ளார்.**



முகமதுஅகமதீன்

சிரியா, ஈரான், வடகொரியா ஆகிய நாடுகளுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கடந்த சில ஆண்டுகளாகவே மோதல் போக்கு இருந்து வருகிறது. ஈரான் அணுவாயுத் தயாரிப்புத் திட்டத்தைக் கைவிடவேண்டும் என்று ஐரோப்பிய நாடுகளும் வற்புறுத்தி வருகின்றன. அணுவாயுதத் திட்டத்தைக் கைவிடுவது தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தவும் ஐரோப்பிய நாடுகள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்காக ஒரு குழுவையும் ஐரோப்பிய நாடுகள் அமைத்தன.

இந்த நிலையில் ஈரானில் நடந்த அதிபர் தேர்தலில் பழமைவாதியும் தெஹ்ரான் முன்னாள் மேயருமான முகமது அகமதீன் வெற்றி பெற்று புதிய அதிபராக பதவியேற்றுள்ளார்.

புதிய அதிபர்முகமது அகமதீன் முதன்முறையாக நிருபர்களுக்கு அளித்தபேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஈரானில் பெண்களுக்குப் புதிய கட்டுப்பாடுகள் வருமா? உடை அனைத்திலும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமா? என்ற கேள்விக்கு அகமதீன் பதில் அளிக்கும்போது, அது எனது வேலை அல்ல. சம்பந்தப்பட்டவர்கள் முடிவு செய்வார்கள் என்று தெரிவித்தார்.

இதற்கிடையே ஜேர்மன் அதிபர் ஜெரார்ஷிரோர்டா கூறும் போது; ஈரானுடன் மீண்டும் பேச்சு நடத்த புதிய திட்டம் ஒன்றை உரு வாக்க வேண்டும் அணுவாயுதத் திட்டத்தை கைவிட்டால் ஈரானுக்கு சில சலுகைகள் அறிவிக்க வேண்டும் என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

## பாகிஸ்தானில் இளம்பெண் பாலியல் விவகாரம் உயர் நீதிமன்ற தீர்ப்பு இடைநிறுத்தம்




பாகிஸ்தான் கிராமமொன்றில் இளம் பெண்ணொருவரைப் பாலியல் வல்லுறவுக் குட்படுத்திய குற்றச்சாட்டுத் தொடர்பாக லாகூர் உயர் நீதிமன்றம் சம்பந்தப்பட்ட ஐந்து சந்தேக நபர்களையும் நிரபராதி எனத் தீர்ப்பளித்ததையடுத்து மேற்படி பெண் தாக்கல் செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்கில் நிரபராதிகள் என்ற தீர்ப்பை உச்ச நீதிமன்றம் நிறுத்தி வைத்துள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற இச்சம்பவம் பற்றி கடந்த மார்ச் மாதம் விசாரித்த லாகூர் நீதிமன்றம் போதிய சாட்சிகள் இன்மையால் சந்தேக நபர் ஐவரும் நிரபராதிகள் எனத் தீர்ப்பளித்தது.

இதனை ஆட்சேபித்த அவ் இளம்பெண் உச்ச நீதிமன்றில் தொடுத்த மேன் முறையீட்டு வழக்கிலேயே மேற்படி இடை நிறுத்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்தச் சம்பவத்துடன் தொடர்புள்ளவரும் மரணதண்டணை விதிக்கப்பட்டு பின்னர் ஆயுள்தண்டனை பெற்றுள்ள ஆறாவது சந்தேகநபரின் வாக்கு மூலங்களைப் பெறவேண்டியிருப்பதாக தெரிவித்துள்ளது.

மேலும் இந்த விவகாரம் உலகின் கவனத்தை ஈர்த்துள்ள நிலையிலும் இப்பெண் வெளிநாடு செல்வதால் நாட்டின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படு வகையில் இதனைப் பரப்புவார் என்று கருதி இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்துமாறு பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷாரப் பஞ்சாப் பொலிஸ் இன்ஸ்பெக்டரை பணித்துள்ளார். அத்துடன் அவரின் வீட்டுக்கு பொலிசாரின் பாதுகாப்பும் வழங்கப் படவுள்ளது.



ஈராக் தலைநகர் பாக்தாத்தில் கார்க்குண்டு வெடிப்பில் சேதமான கார்கள்வரிசையாக நிற்கும் காட்சி.

## ஈராக்கில் தீவிரவாதத்தை ஒழிக்க அமெரிக்கா புதிய திட்டத்தை உருவாக்கும்

(பாக்தாத்)




"ஈராக்கில் மக்களையும் படையினரையும் கொண்டே தீவிரவாதத்துக்கு முடிவு கட்டப்படும்" என்று அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் கூறியுள்ளார்.

ஈராக்கில் நடந்த பொதுத்தேர்தலுக்குப் பின், தீவிரவாதிகளின் தற்கொலைப் படைத்தாக்குதல் அதிகரித்து விட்டது. அமெரிக்கக் கூட்டுப் படைகளுக்கு உதவியாக செயற்படும் ஈராக் பொலிஸ் படையை குறிவைத்து மனித வெடிகுண்டுத் தாக்குதல்கள் நடக்கின்றன.

அமெரிக்கப் பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட் கடந்த ஞாயிறன்று பாக்தாத் சென்றார். தீவிரவாதத்தை ஒழிப்பது பற்றி அவர் அளித்த பேட்டியில்,ஈராக்கில் நடக்கும் தீவிரவாதச் செயல்களை அமெரிக்கப் படைகள் ஒடுக்காது. "ஈராக்மக்களும், ஈராக் பொலிஸ் படையையும் அதைச் செய்வதற்கான சூழ்நிலையை அமெரிக்கா உருவாக்கும். இதற்கு ஐந்து ஆண்டுகள் முதல் 12 ஆண்டுகள் வரை ஆகலாம். அப்போது ஈராக்கில் இருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படும் என்று இதற்கு அர்த்தமில்லை" என்றார்.

வழக்கம் போல், ஈராக்கில் நேற்றும்.நேற்று முன்தினமும் மனித வெடிகுண்டுத் தாக்குதலில் பத்து பொலிஸ் அதிகாரிகளும், இரண்டு பொதுமக்களும் கொல்லப்பட்டனர். மொசூல் நகரிலுள்ள பொலிஸ் தலைமையகம் மீது, வெடிகுண்டுகள் பொருத்தப்பட்ட காரை தீவிரவாதி மோதி வெடித்ததில். இரண்டு அடுக்குகள் கொண்ட பொலிஸ் தலைமையகம் நொருங்கியது குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க கோடீஸ்வரர் விமான விபத்தில் பலி

(வோஷிங்டன்)

உலக மகாகோடீஸ்வரர்கள் பட்டியலில் 11 ஆவது இடத்தில் இருப்பவரும் பிரபல அமெரிக்க நிறுவனமான வால்-மார்ட் நிறுவனத்தின் உரிமையாளருமான ஜான் வால்டன் விமான விபத்தில் பலியாகியுள்ளார். இவர் ஒரு சிறிய விமானத்தை அவரே ஓட்டிச் சென்ற போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.



நேற்றுமுன்தினம் பாக்தாத்தின் கிழக்கே கார்க்குண்டுத் தாக்குதலில் ஏற்பட்ட சேதங்களை ஈராக்கியர்கள் சூழ்ந்து நின்று பார்வையிடுகின்றனர்.

## ஐக்கியநாடுகள் பாதுகாப்புச்சபையில் ஜேர்மனிக்கு நிரந்தர இடம் வழங்க அமெரிக்காவிடம் கோரிக்கை

ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச்சபையில் ஜேர்மனிக்கு நிரந்தர உறுப்பு உரிமை கிடைக்க உதவும்படி ஜேர்மன் அதிபர் அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சை கேட்டுள்ளார்.

வோஷிங்டன் நகரில் நேற்று முன்தினம் ஜேர்மன் அதிபருக்கும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சிற்குமிடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றது.

இதன்போது ஐரோப்பிய ஒன்றியத்தின் எதிர்கால நடவடிக்கைகள் மற்றும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தொடர்பாக இருதலைவர்களினதும். பேச்சுவார்த்தையிலும் விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. யுத்தம் மற்றும் பயங்கரவாதம் தொடர்பாகவும் ஈரானின் அணுவாயுத உற்பத்தித்திட்டம் தொடர்பாகவும் இருதலைவர்களும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளனர் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச்சபையின் அங்கத்துவ நாடுகளின் எண்ணிக்கையை 15 இலிருந்து 25ஆக மாற்றுவது குறித்தும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஜி-8 மாநாடு தொடர்பாகவும் ஜேர்மனியில் இடம்பெறவுள்ள பொதுத்தேர்தல் தொடர்பாகவும் இருதலைவர்களும் பேச்சுவார்த்தை நடாத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நேபாளத்தில் தீவிரவாதிகள் தாக்குதல் 12 படையினர் பலி; மாணவர்கள் கடத்தல்

(காத்மண்டு)

நேபாளத்தின் மேற்குப் பகுதியில் படையினருக்கும், மாவோயிஸ்ட் தீவிரவாதிகளுக்கும் நடந்த சண்டையில் 12 பேர் பலியாகினர். மற்றும் இரண்டு சம்பவங்களில் 90 பள்ளிக் குழந்தைகள் உட்பட 340 பேரை தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர்.

காத்மண்டுவிலிருந்து 450 கி.மீ தொலைவிலுள்ள கானா கிராமத்தில் கடந்த சனிக்கிழமை இரவு இப்பகுதியில் இராணுவத்தினர் மற்றும் பொலிசார் இணைந்து கூட்டு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் திடீர் தாக்குதல் நடத்தினர். உடன் பொலிசார், ராணுவத்தினர் இணைந்த பாதுகாப்புப் படையினரும் பதில் தாக்குதல் நடத்தினர். இந்தச் சண்டையில் இராணுவத்தினர் ஆறு பேரும் பொலிசார் ஆறு பேரும் பலியாகினர்.

தாக்குதல் தொடர்பான தகவல் கிடைத்ததும், உலங்கு வானூர்தி மூலம் படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.

மற்றொரு சம்பவத்தில் குல்மி மாவட்டத்திலுள்ள ஒரு பள்ளியில் இருந்து 90 பள்ளிக் குழந்தைகளை சனிக்கிழமை காலை மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட மாணவர்களில் பெரும்பாலானோர் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்பு படிப்பவர்கள் இதேபோன்று கான்சன்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த கிராம, மக்கள் 250 பேரும் மாவோயிஸ்ட் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டுள்ளனர். இத்தகவலை நேபாள இராணுவம் வெளியிட்டுள்ளது.

## பத்து வயதில் கல்லூரியில் சேர்ந்த சீன மாணவன்

(பீஜிங்)

வடமேற்கு சீனாவைச் சேர்ந்த பத்துவயது மாணவன் கல்லூரியில் சேர்ந்துள்ளான். சீனாவிலேயே மிகக் குறைந்த வயதில் கல்லூரியில் சேர்ந்தவர் என்ற பெருமை இந்த மாணவனுக்கு கிடைத்துள்ளது. ஜாங் ஜின்யாங் என்ற இந்த மாணவன் தேசியக்கல்லூரி நுழைவுத் தேர்வில் 505 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இது கல்லூரியில் சேர தேவையான புள்ளியைவிட 47 புள்ளிகள் அதிகமாகும்.

## மெக்சிக்கோவில்43 பணயக் கைதிகள் மீட்பு

மெக்சிக்கோவில் கடத்தல்காரர்களின் பிடியிலிருந்த 43 பணயக்கைதிகளை நேற்றுமுன்தினம் பொலிசார் மீட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, உள்ளூர் பொலிசார் சிலர் வன்முறைக்கும்பலுடன் ஒன்று சேர்ந்து இவர்களை பணயக்கைதிகளாக பிடித்துள்ளனர்.

மெக்சிக்கோவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச் சம்பவத்தையடுத்து பொலிசார் தீவிரதேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.


இந் நிலையில் அமெரிக்க எல்லைக்கருகிலுள்ள நகரில் இரண்டு கட்டடங்களில் பணயக்கைதிகளாக அடைக்கப் பட்டிருந்த 43 பேரையும் பொலிசார் மீட்டுள்ளனர்.

இதன் போது இரு தரப்பினிடையே துப்பாக்கிச் சூடு நடைபெற்ற போதும் எவ்வித உயிர்ச்சேதங்களோ. காயங்களோ ஏற்படவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக சில கடத்தல்காரர்கள் தப்பிச் சென்றபோதும் ஏனையோரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

# ஆழிப்பேரலை தாக்குதலை விட சிங்களப் பேரினவாதமே பயங்கரமானது

## திருமலையில் மாவை சேனாதிராஜா உரை



(திருகோணமலை)

**"ஆழிப்பேரலையிலும் பார்க்க சிங்களப் பேரினவாதமே மிகவும் பயங்கரமானதாகும் என தமிழ்க் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா தெரிவித்துள்ளார்.**

ஆழிப்பேரலையினால் நாட்டிலே அனைத்து இனங்களையும் சேர்ந்த சுமார் 30 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்தனர். அவர்களுக்கு வாழ்வளிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள பொதுக் கட்டமைப்பு வந்துள்ளது. அதேவேளை சிங்களப் பேரினவாதத்தின் யுத்தம்காரணமாக 60 ஆயிரத் திற்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் 20 ஆண்டுகளில் உயிரிழந்தனர். இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சித்தலைவரும் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராஜா, சாம்பல்தீவுக் கிராமத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சிறுவர் இல்லத்தின் புதிய கட்டடத்திற்கான அத்திவாரக் கல்நடும் நிகழ்வில் பங்குபற்றி உரைநிகழ்த்தும்போது, தெரிவித்தார்.

இந்தியாவில் ஒரு இலட்சம் தமிழர், வெளி நாடுகளில் ஆறு இலட்சம் தமிழர், வடக்குக் கிழக்கில் இலட்சக்கணக்கான தமிழர் சொந்த வீடுகளுக்குத் திரும்பிச்செல்ல முடியாமல் அகதிமுகாம்கள், நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றனர். இவர்களின் பிரச்சினைக்குத் தீர்வு காணுவது எப்போது?

"யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் நல்வாழ்வு மற்றும் அவர்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதான அரசியல் தீர்வு ஒன்றைக் காணுவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்போது, பொதுக் கட்டமைப்புக்குக் காட்டப்பட்ட எதிர்ப்பிலும்பார்க்க மோசமான முறையில் சிங்களப் பேரினவாத அலை வீசக் கூடும்" என்றும் மாவை சேனாதி ராஜா தெரிவித்தார்.

ஆழிப்பேரலைகளினால் பாதிக்கப்பட் டவர்களின் மறுவாழ்வு குறித்து மனிதாபிமான உதவிகள், தமிழ் மக்களுக்குக் கிடைப்பதை எதிர்க்கும் சிங்கள பௌத்த பேரினவாதம் தமிழ்த் தேசிய இனத்தை அழிக்கும் எண்ணத்துடன்தான் செயற்பட்டு வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## வியாழக்கிழமை மார்புச் சிகிச்சை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு வைத்தியசாலையில் நாளை மார்பு நோய் சிகிச்சை இடம்பெறுமென முல்லைத்தீவு மாவட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையப் பொதுச் சுகாதார பரிசோதகர் அறிவித்துள்ளார்.

இச்சிகிச்சையானது ஒவ்வொரு மாதமும் இரண்டாம், மூன்றாம் செவ்வாய்க்கிழமைகளில் இடம்பெற்று வந்தது. ஆனால் இம்மாதம் வியாழக்கிழமையே சிகிச்சை நடைபெறவுள் ளது (08)

## கட்டடத் திறப்பு விழா

'கார்ப்' நிறுவன நிதியுதவியுடன் கட்டப்பட்ட மன்னார், மடு உதவி அரச அதிபர் - அலுவலகத்தின் புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம்இடம்பெற்றுள்ளது

காலை 10.00 மணிக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ப.விஸ்வலிங்கம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மடு உதவி அரச அதிபர் சுரேஸ்குமார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் நிர்வாக சேவையைச் சேர்ந்த பொறுப்பாளர்களும் கலந்து கொண்டு உரை யாற்றினார்கள். கடந்தகால போர் அனர்த்தத்தினால் இந்த அலுவலகம் சேத மாக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (18)

## அமெரிக்க நிதியுதவியுடன் மாணவர்களின் நலன்கருதி சூரிய மின்கலத்தொகுதி

(மன்னார்)

மின்சாரம் இல்லாத பாடசாலை களின் நலன் கருதி மன்னார் மாவட்டத்தில் அரசியல் துறையி னரின் ஏற்பாட்டாலும் பொருண்மிய மதியுரையகத்தால் அமெரிக்க நாட்டு நிதியுடன் சூரிய மின்கலத் தொகுதி வழங்கும் நிகழ்வு இடம் பெற்றுள்ளது.

மன்னார் கருங்கண்டல் றோமன் கத்தோலிக்க பாடசாலையில் நேற்று முன்தினம் 11.30 மணிக்கு மன்னார் மாவட்ட அரசியல்துறைபொறுப்பாளர் எஸ். இனியவன் அவர்களின் தலை மையில் இடம்பெற்ற நிகழ்வில் தமிழீழதேசியக் கொடியைக் தமிழீழ அரசியல்துறைதுணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார். பொதுச் சுடரை பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த செழியன் ஏற்றினார். மங்கல விளக்கினை கனடா நாட்டு பொருண்மிய பிரமுகர் வில்லியம், நிறைவேற்று பணிப்பாளர் திலக் உட்பட கல்வி அதிகாரிகள் ஏற்றி வைத்தனர். 15 சூரிய மின்கலத் தொகுதிகளில்11சூரிய மின்கலத்தொகுதி மடுக்கல்வி வலயத்துக்கும், 04 மன்னார் கல்வி வலயத்திற்கும் வழங்கப்பட்டன. முதலாவது சூரிய மின்கலத் தொகுதியை தமிழீழ அரசியல்துறை துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் வழங்கினார். இந்நிகழ்வில் சிறப் புரையை மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் ம.ஆபேல்றெவ்வல் மடுவலயக் கல்விப்பணிப்பாளர் தெய்வேந்திரன் உட்பட பலர் உரையாற்றினர். (18)

## வெண்புறா செயற்கைக் கால் உற்பத்தி தொழிற் கூடத்திற்கான அடிக்கல் நாட்டு விழா

(திருகோமலை)



திருகோணமலை மாவட்டத்தில் செயற்கைக்கால் உற்பத்தி தொழில் நுட்பக் கூடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. லண்டன் வெண்புறா நிறுவன நிதிப் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும் இத்திட்டத்தின் மூலம் இன, மத பேதங்களைக் கடந்து போரினால் தமது உடலுறுப்புக்களை இழந்த கிழக்கு மாகாண மக்களுக்கு உதவ முடியும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

இந் நிகழ்வில் லண்டன் வெண்புறா நிறுவனப் பிரதிநிதி வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி, திருகோணமலை நகர் அரசியல் துறைப்பொறுப்பாளர் க.சிவகுமார் திருகோணமலை மாவட்ட தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பணிப்பாளர் விஜயகுமார் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி அவர்கள் உரை யாற்றுகையில் இங்கு அமைக்கப்படவுள்ள வெண்புறா தொழில் நுட்பக் கூடமானது போரினால் அங்கங்களை இழந்தவர்களுக்கு செயற்கை உறுப்புக்களைச் செய்து வழங்குவதுடன் இதன் செயற்பாடு இன, மத பேதமற்ற முறையிலும் கிழக்கு மாகாணத் தேவையை மையமாகக் கொண்டும் செயற்படும் என்றும் குறிப்பிட்டார்.

## மரக்கறி கழிவுகள் மூலம் பசளைதயாரிக்கும் திட்டம் யூலை- 1 இல் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

பொதுச்சந்தைகளிலுள்ள மரக்கறிக் கழிவுகளை சேகரித்து அதனைப் பசளையாக்கி மீண்டும் விவசாய உற்பத்திக்கு பயன்படுத்துவதற்கான திட்டத்தினை பொருண்மிய மதியுரையகமும் கரைச்சிப்பிரதேச சபையும் இணைந்து நடைமுறைப்படுத்த உள்ளன.

இதற்கான கலந்துரையாடல் கடந்த 23ஆம் திகதின்று பொருண்மிய மதியுரையகத்தில் இடம்பெற்றது.

மேற்படி செயற்திட்டம் எதிர்வரும் முதலாம் திகதியன்று ஆரம்பிக்கப்படவுள்ளதென கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையாளர் பொன் நித்தியானந்தம் தெரிவித்துள்ளார். (சோ)




*கிளிநொச்சி – ஜெயந்திநகர் கிராம சேவை அலுவலர் காரியாலயத்தினை படத்தில் காணலாம். மேற்படி காரியாலயத்தில் அலுவலகப் பெயர்ப் பலகை போடப் பட்டுள்ளது. ஆனால் காரியாலய அலுவல்கள் ஜெயந்தி நகர் கி. அ. ச மண்டபத்தில் வைத்தே தற்போது நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (படம் சோதி)*

## பின் தங்கிய கிராமங்களிற்கு சர்வோதய நிறுவனம் உதவி

(மன்னார்)

மன்னாரில் மிகவும் பின் தங்கிய கிராமங்களில் அடிப்படை வசதிகள் இல்லாத மக்கள்வாழும் பிரதேசங்களைத் தெரிவு செய்து அப்பகுதிகளில் முக்கிய அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க சர்வோதயம் முன் வந்துள்ளது.

இதற்கமைய மன்னாரில், சாவற்கட்டு, எழுத்தூர், எமில் நகர் போன்ற கிராமங்களில் ஒவ்வொன்றும் பத்தாயிரம் ரூபா பெறுமதியான மலசல கூடங்களைக் கட்டுவதற்கு மேற் படி சர்வோதய இயக்கம் உபகரணங்களை வழங்கியுள்ளது. இது வரையில் நூறிற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு இவ் அமைப்பு உதவிகள் செய்துள்ளது. (18)

## கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதிகரிப்பு கட்டுப்படுத்தும் நடவழக்கையில் கரைச்சி பிரதேச சபை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் கட்டாக்காலி ஆடு, மாடுகளின் தொல்லை அதி கரித்து வருவது காரணமாக அதனை கட்டுப்படுத்தும் நடவடிக் கையினை கரைச்சி பிரதேச சபையினர் மேற்கொண்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

இவ் விடயம் தொடர்பாக கரைச்சி பிரதேச சபை விசேட ஆணையருடன் தொடர்பு கொண்ட பொழுது தெரிவிக்கையில், கட்டாக்காலி ஆடு மாடுகள் பொதுச் சந்தைப் பகுதிக்குள் வரு வதைக் கட்டுப்படுத்தும் முகமாக கட்டாக்காலி மாடுகளைப் பிடிப்பதற்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதெனவும் பிடிக்கப்படும் ஆடு அல்லது மாடு ஒன்றிற்கு ரூபா 500 பிடிகாசாகவும் நாளொன்றிற்கு பராமரிப்பு செலவாக 100 ரூபா அற விடப்படுமெனவும் தெரிவித்துள்ளதுடன் குறிப்பிட்ட நாட்க ளுக்குள் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி ஆடு மாடுகளை பெற்றுக் கொள்ள உரிமையாளர்கள் வராத விடத்து குறிப்பிட்ட கால எல்லையின் பின் அவைகள் பகிரங்க ஏலத்தில் விடப்படுமென தெரிவித்துள்ளார். (சோ)

## கனடா வாழ் திருமலை இளைஞர்களின் நிதியுதவியுடன் 30 இலட்சம் செலவில் சிறுவர் இல்லத்திற்கான நிரந்தரக் கட்டடம்

(திருகோணமலை)

கனடா வாழ் திருகோணமலைத் தமிழ் இளைஞர்களின் நிதி உதவியுடன் செயற்படும் திருகோணமலை நலன் புரிச்சங்கம், திருகோணமலை- சாம்பல் தீவுக்கிராமத்தில் செயற்பட்டுவரும் சிறுவர் இல்லத்திற்கு 30 இலட்சம் ரூபா செலவில் நிரந்தரக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்க விருக்கின்றது. இதற்காக அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

முதலாவதுஅத்திவாரக்கல்லை திருமலை மாவட்டப் [illegible]ாளுமன்ற உறுப்பினர்இரா. சம்பந்தன் நாட்டினார்.தொடர்ந்து [illegible]க்கற்களை யாழ். மாவட்ட பா.உறுப்பினரும் இலங்கைத்தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதி ராஜா, திருமலை மாவட்ட பா.உறுப்பினர் துரைரெட்ணசிங்கம் ஆகியோர் நாட்டினர்.

வன்செயல்காரணமாக மூதூர் அன்னை சாரதா இல்லம் இடம்பெயர்ந்தபோது , இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வந்த ஆதரவற்ற குழந்தைகளில் சிறுமிகள் மல்லிகைத்தீவிலும், சிறுவர்கள் சாம்பல்தீவிலும் தற்காலிக கட்டங்களில் தங்க வைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றனர். மல்லிகைத் தீவிலுள்ள ஆதரவற்ற சிறுமிகளுக்கென நிரந்தரக்கட்டடம் ஒன்று தற்போது மூன்று மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றது. (25)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# தமிழர்களின் தேசிய விடுதலைப்போராட்டத்தை ஐ.நா. சாசனத்திற்கமைவாக அங்கீகரிக்குக

## -ஐரோப்பிய பாராளுமன்றத் தலைவரிடம் தீவக மக்கள் கோரிக்கை

(தீவகம்)

***எமது தேசிய விடுதலைப்போராட்டத்தை சர்வதேச நாடுகள் ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத் திற்கமைவாக அங்கீகரிக்க வேண்டும் என மக்கள் சார்பாக தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு தீவக பொது அமைப்புக்களின் ஒன்றியம் நேற்று முன்தினம் ஐரோப்பிய பாராளுமன்ற ஒன்றியத் தலைவர் ப்ரசெல்ஸ் அவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள மக ஜரில் தெரிவித்துள்ளது.***

பௌத்த சிங்கள பேரினவாதப் பூதத்தை தமிழ் மக்கள் அனைவரும் ஓரணியில் நின்று தோற்கடிக்க உறுதிபூண்டுள்ளோம். எமது வாழ்விடங்களை ஆக்கிரமித்துள்ள சிங்களப்படைகளை வெளியேற்றி எமது சுயநிர்ணயத்தை நாமே பலப்படுத்துவோம்.

சிங்கள பௌத்த பேரினவாதிகளின் மேலாதிக்கவாதம் இருக்கும் வரை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு நியாயபூர்வமான தீர்வொன்றை சிங்கள ஆட்சியாளர்களினால் வழங்க முடியாது என்பதை யாவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு தீர்வு தரக்கூடிய சிங்களத் தலைமைகள் இல்லை என்பதே ஐம்பது ஆண்டுகளாக எமது பட்டறிவில் பெறப்பட்ட அனுபவமாகும். சிங்கள அரசியல் தலைமைகளின் மீது நாம் நம்பிக்கை வைத்திருப்பதில் பயனேதும் ஏற்படாது.

எனவே நாம் தீர்க்கமான முடிவு எடுக்கின்ற ஒரு வரலாற்றுக் கட்டத்தை நெருங்கிவிட்டோம் என்பதை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச்சொல்ல விரும்புகின்றோம். சிங்கள பௌத்த பேரினவாத ஒடுக்கு முறையில் இருந்து விடுபட்டு தன்னாட்சி இறைமையுள்ள இனமாக வாழ வேண்டுமென்பதே தமிழ் பேசும மக்களின் உறுதியான நிலைப்பாடாகும் என அம் மகஜரில் தெரிவிக்கப் பட்டுள்ளது. (சு,33,28)

## கிறிஸ்தவ ஆசிரியரை நியமிக்கக் கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு கிறிஸ்தவ சமய பாடத்தைக் கற்பிக்க கிறிஸ்தவ சமய பாட ஆசிரியர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப் பாடசாலையின் அதிபர் கோரியுள்ளார். (28)

## சுனாமி வீடமைப்புத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிரந்தர வீடுகளை அமைக்கும்திட்டம் அடுத்தமாதம் முதல் ஆரம்பித்து வைக்கப் பட விருப்பதாக யாழ்.அரச செயலக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வீடுகள் யாவும் கடற்கரையோர பாதுகாப்பு வலயத்துக்கு அப்பாலேயே அமைக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

உறுதியான கட்டடப்பொருட்களால் ஒவ்வொன்றும் 500 சதுர அடிபரப் புடையனவாக இந்த வீடுகள் நிர்மாணித்துக்கொடுக்கப்படும் என்றும் இவற்றுக்கான மலசலகூட வசதிகள் குடிநீர் வசதிகள் போன்றவை ஏற்படுத்திக்கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வீடமைப்புத்திட்டங்கள் யாவும் எதிர்வரும் மழைகாலத்துக்கு முன்பதாக அமைத்து முடிக்கப்படவேண்டும் என யாழ்.மாவட்ட அரச அதிபர் கணேஷ் இவ்வீடமைப்புத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ள அமைப் புக்களை வலியுறுத்தியுள்ளார். (33)

## கடற்கரையோர இராணுவ வேலிகளால் கடற்றொழிலாளர் நிர்க்கதி நிலை

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினர் கடற்கரையோரங்களில் இராணுவ வேலிகளை அமைத்து வருவதனால் கடற்றொழிலாளர்கள் பாதிப்படையும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

மணியம் தோட்டம், பூம்புகார், அரியாலை கிழக்கு, கொழும்புத்துறைப் பகுதியில் கடற்கரையிலிருந்து நூறு மற்றர் தூரத்தில் முட்கம்பிகள் கொண்டு கடலினுள் வேலிகளை உருவாக்கி வருகின்றார்கள்.

இதன் காரணமாக சிறகு வலை மற்றும் சிறு அளவில் தொழில் செய்யும் பல நூற்றுக்கணக்கான கடற்றொழிலாளர் குடும்பங்கள் தொழிலை மீண்டும் இழந்து நிர்க்கதியான நிலைக் குத் தள்ளப்பட்டுள்ளன. (28)

## சம்பள உயர்வை உடனடியாக வழங்கக் கோரி யாழ்.பல்கலை ஊழியர் வேலைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகங்களின் மானிய ஆணைக் குழுவினால் ஊழியர்களுக்கு வழங்கும்படி தீர்மானித்த சம்பள உயர்ச்சியை வழங்கக் கோரி நேற்று முதல் பல்கலைக் கழக ஊழியர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சம்பள உயர்வை வழங்கக் கோரி கடந்த சில நாட்களுக்கு முன்னர் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் இவர்கள் ஈடுபட்டனர்.

தென் இலங்கையில் பொதுக் கட்டமைப்பு சம்பந்தமாக நிலவிய அரசியல் குழப்பங்கள் காரணமாக அடையாளமாக ஒருநாள் நடத்தி விட்டு அப்போராட்டம் நிறுத்தப்பட்டது. நேற்று மீண்டும் சம்பள உயர்வுக் கோரிக்கையை முன் வைத்து வேலை பகிஷ்கரிப்புப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக பேரவைக்கு அங்கத்தவர்கள் நியமனம் செய்யப்பட்டு குறுகிய நாட்களுக்கு இடையிலேயே இப் போராட்டம் இடம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊழியர் தொழிற்சங்கத் தலைவர் சி.தங்கராஜா *தலைமையில் பல் கலைக்கழக வளாகத்தில் காலை 9.30 மணிக்கு வேலை நிறுததம் சம்பந்தமாக பொதுக்கூட்டம் ஒன்றும் இடம் பெற்றது.

தொடர்ந்து தமது உரிமைகளை வென்றெடுக்கும் வரை வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுப்பதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. (41)

## ஆழிப்பேரலை தாக்கி ஆறு மாதங்கள்; கடற்றொழில் வழமைக்குத் திரும்பவில்லை

### -யாழ்.க.ச.ச சம்மேளன செயலர் கவலை

(யாழ்ப்பாணம்)

சுனாமித்தாக்கம் ஏற்பட்டு ஆறு மாதங்கள் கடந்து விட்ட நிலையிலும் சுனாமியால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு கடற்றொழிலாளர்களது தொழில் நடவடிக்கைகள் இன்னமும் வழமைக்குத் திரும்பவில்லையென யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் சங்க சமாச சம்மேளனத்தின் செயலர் க.சூரியகுமார் கவலை தெரிவித்தார்.

சுனாமியால் கடற்றொழில் உபகரணங்களையும், கடற்கலங்களையும் இழந்த கடற்றொழிலாளர்களுக்கு அவர்களின் கடற்றொழில் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு ஏற்ற வசதிகள் பூரணமாகச் செய்து கொடுக்கப்படாமையே இதற்குக் காரணமாகும்.

இந்த நிலைமை தொடர்வதால் பல கடற்றொழிலாளர் குடும்பங்கள் வறுமையால் வாடுகின்றன.

பல கடற்றொழிலாளர்கள் தம் கடற்றொழில் நடவடிக்கைகளைக் கைவிட்டு கூலிவேலைகளில் ஈடுபடத்தொடங்கியிருக்கின்றனர்.

இது யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர்களின் துறைசார் மேம்பாட்டையும், பொருளாதாரத்தையும் வலுவாகப் பாதித்துள்ளது என்றும் அவர் கூறினார். (33)

## சுனாமி மீள் நிர்மாணப்பணிகளுக்கு கட்டடத்தொழிலாளர் பற்றாக்குறை

(யாழ்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கட்டடத் தொழிலாளர் பற்றாக்குறை நிலவி வருவதனால் சுனாமியால் பாதிக் கப்பட்ட பகுதிகளின் மீள் நிர்மாணப் பணி களிலும் பல பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் கூறியுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் இடம்பெற்றுவரும் பெருமளவிலான மீள் நிர்மாணப் பணிகளுக்கு சமநேரத்தில் குடாநாட்டின் ஏனைய பகுதிகளிலும் கோவில்கள், பொதுக்கட்டடங்கள் , வீடுகள் என பல்வேறு கட்டடநிர்மாணப் பணிகளும் இடம்பெற்றுவருகின்றமையே இந்தக் கட்டடத்தொழிலாளர்கள் பற்றாக்குறை ஏற்படக்காரணம் எனவும் யாழ்.அரச அதிபர் கணேஷ் மேலும் கூறியுள்ளார்.


இதனால் பிறமாவட்டங்களில் இருந்து யாழ். மாவட்டத்துக்கான கட்டடத் தொழிலாளர்களைத் தருவிக்கவேண்டிய தேவைப்பாடு உள்ளதாகவும் அரச அதிபர் கணேஷ் சுட்டிக்காட்டியுள்ளார். (33)

## கைதடியில் ஆறு மயானங்களை புனரமைக்க கோரிக்கை

(தென்மராட்சி)

கைதடி வலயத்தில் உள்ள ஆறு மயானங்களை வரும் மழைகாலத்துக்கு முன்னர் புனரமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென சாவகச்சேரி பிரதேச சபையிடம் கைதடிப் பிரதேச அபிவிருத்திக்குழு கோரிக்கை விடுத்துள்ளது.

இம்மயானங்கள் மக்கள் சென்று வருவதற்கும், தமது கடமைகளை செய்வதற்கும் வசதிகள் அற்று இருப்பதாகவும், கட்டடங்களோ மேல் கூரைகளோ, இளைப்பாறும் மண்டபங்களோ, கிணறுகளோ அற்றுச் செல்லும் பாதைகள் எந்த வித வசதிகளும் அற்று இருப்பதாகவும் இது குறித்து சாவகசசேரி பிரதேசசபை கூடுதல் கவனம் எடுக்கும்படியும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (28)

நேற்று வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்ட யாழ். பல்கலை ஊழியர்களைப் படத்தில் காணலாம். (41)

## யாழ்.பொலிஸ் நிலையங்களில் பெண்களுக்கு அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களுக்குச் செல்லும் பெண் முறைப்பாட்டாளர்களையோ அல்லது பெண் சந்தேக நபர்களையோ பெண் பொலிசார் விசாரணை செய்வதில்லை என குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த நிலைமை நீண்ட காலமாக யாழ். குடாநாட்டில் தொடர்வதன் காரணமாக பெண் உரிமை மீறல்கள் இடம்பெற்றுவருவதாக யாழ்- குடாநாட்டிலுள்ள மகளிர் நலன்பேணும் அமைப்புக்கள் குற்றம் சாட்டி வருகின்றன.

இந்த நிலைமை தொடர்வதற்கு யாழ்- குடாநாட்டிலுள்ள பொலிஸ் நிலையங்களில் பெண் பொலிசாரின் எண்ணிக்கை மிகக்குறைவாகக் காணப்படுவதுடன்

இவர்களின் ஒரு சில பெண் பொலிசாருக்கு மட்டுமே தமிழ்மொழி பரிட்சயமாக இருக்கின்றமையே இதற்கு காரணமென்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இது குறித்து யாழ்.மாவட்டத்தில் உள்ள பல அமைப்புக்களும் சிறிலங்கா பொலிஸ் தலைமையகத்திற்கு எடுத்துக்கூறியும் அது குறித்த நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. (33)

## கோப்பாய் கல்வியியற்கல்லூரியில் இந்து மாமன்ற மாநாடு

(அலுவலகசெய்தியாளர்)

அகில இலங்கை இந்து மாமன்றமும், யாழ்ப்பாணம் தேசியக் கலவியியற் கல்லூரியும் இணைந்து நடாத்தும் மாநாடு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதி வரை கோப்பாய் யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்து மாமன்றப் பொன் விழாவினையொட்டி நடத்தப்படும் இந்து மாநாடு குறித்த விபரங்களை கிளி. மாவட்ட செயலகத்தினரிடம் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (சோ)

# பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கத்திலேயே உடன்பாட்டின் வெற்றி தங்கியுள்ளது

சுனாமி அனர்த்த புனர்வாழ்வு, புனர் நிர்மாணத்திற்கான பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகியுள்ளது. அதிகாரிகள் மட்டத்திலான ஓர் உடன்பாட்டை செய்து கொள்வதற்காகச் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பெரிதும் சிரமப்பட வேண்டியிருந்தமை சற்று அதிகமானதொன்றுதான்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து இப்பொதுக் கட்டமைப்பு ஒப்பந்தத்தில் அரசாங்கம் கையொப்பம் இடவேண்டிய தேவையும், கட்டாயமும் இருந்தது என்றே கூறலாம். இதற்கான காரணிகளில் ஒன்று பொதுக் கட்டமைப்பு விவகாரத்தில் சர்வதேச நாடுகள் எடுத்த ஒருமித்த நிலைப்பாடு.



அதாவது சுனாமி மீள் கட்டமைப்புப்பணிக்கென விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் அரசாங்கம் இணக்கப்பாடு ஒன்றைக் காணவேண்டும் என ஐ.நாவின் செயலாளர் கொபிஅனான், அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதி பில்கிளிங்டன் ஆகியோர் அபிப்பிராயம் வெளியிட்ட அதேவேளை, உதவி வழங்கும் நாடுகள் மற்றும் நிறுவனங்கள் யாவும் ஒரே நிலைப்பாட்டுடன் அரசாங்கம் மீது நிர்ப்பந்தத்தைக் கொடுத்தன.

அத்தோடு பொதுக்கட்டமைப்பு ஒன்று உருவாகாத பட்சத்தில் சிறிலங்கா அரசிற்கு சுனாமி அனர்த்த நிதியுதவி வழங்குவதற்கு அவை பின்னடித்த்ன. அது மட்டுமன்றி இணக்கப்பாடு ஏற்படாத நிலையில் தமிழ் மக்களுக்கு ஏதோ ஒருவகையில் உதவி அளிக்கப்படும் என்பதையும் அவை வலியுறுத்தத்தொடங்கியிருந்தன.

உதவி வழங்கும் நாடுகளின் இந்நிலைப்பாடு இவ்வாறு கடுமையானதாக இருக்கையில் தென்னிலங்கை அரசியலிலும் சனாதிபதி நெருக்கடியை எதிர்நோக்கியிருந்தார். அதாவது பங்காளிக்கட்சியாக இருந்த ஜே.வி.பி கொடுத்த நெருக்கடி ஏதோ ஒருவகையில் ஜே.வி.பி யை ஓரம் தள்ள வேண்டிய கட்டாயத்தை சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிற்குக் கொடுத்தது. ஜே.வி.பியின் நிபந்தனைகளுக்குப் பணிந்தால் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் எதிர்காலம் பெரும் கேள்விக்குள்ளாவது தவிர்க்க முடியாது என்ற சூழ்நிலை வளர்ச்சி கண்டுவந்தது.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகாவிற்கு- சர்வதேசத்தின் ஆதரவுடன் ஜே.வி.பி யை ஓரம் தள்ளுவதற்கானதொரு வாய்ப்பை பொதுக்கட்டமைப்புக் கொடுத்தது எனலாம். இதனடிப்படையில் அவர் பொதுக்கட்டமைப்பை உருவாக்குதல் என்ற முடிவுக்கு வந்தார். அதாவது ஒரு புறத்தில் சர்வதேசத்தின் நிர்ப்பந்தம், மறுபுறத்தில் ஜே.வி.பி கொடுத்த நெருக்கடிக்குத் தீர்வாக பொதுக்கட்டமைப்பில் அரசாங்கம் கையொப்பமிட்டது.

ஆனால் இத்தகைய உடன்பாட்டையும் சனாதிபதி சந்திரிகா தான் நினைத்த வேளையில் நிறைவேற்றி விடக்கூடியதான சூழ்நிலை இருக்கவில்லை. ஒருபுறம் பௌத்த பீடங்கள், மறுபுறம் ஜே.வி.பி, ஜாதிகஹெல உறுமய ஆகிய பேரினவாத அரசியற் கட்சிகள் கடும் எதிர்ப்பைக் காட்டிய வண்ணம் இருந்தன.

இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை பகிரங்கமாக நிறைவேற்றிவிடவில்லை. நாட்டில் பெரும் குழப்பங்கள் விளைந்துவிடலாம் என்ற அச்சம் காரணமாக, ஒரு வகையில் இரகசிய நடவடிக்கை போன்றே கைச்சாத்தாகியது. அதாவது கைச்சாத்திடும் நாள், நேரம் என்பன கூடப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிப்புச் செய்யப்படவில்லை. அது மட்டுமன்றி அது ஊகிக்கப்பட முடியாமல் இருப்பதற்கு சில திசை திருப்பும் நடவடிக்கைகள் கூட மேற்கொள்ளப்பட்டன. பாராளுமன்றத்தில் கூட கையொப்பம் இடுதல் பற்றிய கேள்விக்கு உரிய பதில் அளிக்கப்படவில்லை. அது மட்டுமன்றி பௌத்த பீடாதிபதிகளின் அங்கீகாரம் பெறப்படாமல் பொதுக் கட்டமைப்பில் கையொப்பம் இடப்போவதில்லை என சனாதிபதி அளித்திருந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டிய நிர்ப்பந்தமும் இருந்தது. இந்நிலையில் சனாதிபதி சந்திரிகா பௌத்த பீடாதிபதிகளை நேரில் சந்தித்து அவர்களைத் திருப்தி கொள்ளவைத்தார். இதற்காக அவர் சில அன்பளிப்புக்களைச் செய்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதே சமயம் பொதுக்கட்டமைப்புக் குறித்து சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்குள்ளேயே காணப்பட்ட குழப்பங்களையும் சீர் செய்யவேண்டிய கட்டாயம் சந்திரிகா குமாரதுங்கவிற்கு இருந்தது. இதன் ஓர் அங்கமாகவே அமைச்சர்களான மங்கள சமரவீர அனுராபண்டாரநாயக்க ஆகியோர் வெளிநாட்டிற்கும் அனுப்பப்பட்டிருந்தனர்.

ஆனால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை எத்தகைய நெருக்கடிகளுக்கு மத்தியில் உருவாக்கியிருப்பினும் அதற்காக சனாதிபதி சந்திரிகா பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் உளப்பூர்வமாக ஆர்வம் கொண்டிருந்தார் என்றோ, உடன்பாட்டை உரிய முறையில் அமுலாக்கம் செய்யவிளைவார்றென்றோ கொள்வதற்கில்லை.

சனாதிபதி சந்திரிகாவின் கடந்தகால



அரசியல் வரலாற்றில் அவர் ஒரு நேர்மையான, வாக்குறுதிப்படி நடக்கும் அரசியல்வாதியாக அடையாளம் காட்டப்பட்டதாக இல்லை. அவர் தனது ஆட்சிக்காலத்தில் கடைப்பிடித்த கொள்கைகள்-கள யதார்த்தத்திற்கும் நாட்டின் நலனுக்கும் இடையூறானவையாகவே இருந்துள்ளன.

எடுத்துக்காட்டாக அவர் 1994 இல் ஆட்சிக்கு வருவதற்காக அளித்த வாக்குறுதிகளை கைவிட்டமை, அதன் பின்னர் அவர் சமாதானத்தின் பெயரில் செய்த யுத்தம், தமிழ்ப் பிரதேசங்களில் நடத்திய ஆக்கிரமிப்பு, படுகொலைகள் என்பன அவர் பேரினவாத அரசியல்வாதிகளில் இருந்து மாற்றமற்றவர் என்பதையே வெளிக்காட்டின. ஆகையினால் பொதுக்கட்டமைப்பின் வெற்றியானது அதன் அமுலாக்கத்திலேயே தங்கியுள்ளது. அதாவது பொதுக்கட்டமைப்பு உடன்பாட்டை அரசாங்கம் அமுல் செய்ததான பின்னரே அதன் வெற்றி, தோல்வி பற்றிக்கூறமுடியும்.

சிறிலங்கா ஆட்சியாளர்களுடன் கடந்த 50 ஆண்டு வரலாற்றில் பல உடன்பாடுகள் செய்த அனுபவம் தமிழ் மக்களுக்கு உண்டு. ஆனால் அவை எவையும் அமுலாக்கப்படாததன் விளைவே இனப்பிரச்சினை இன்றைய மோசமான கட்டத்தை அடையக் காரணமாகும். இந்நிலையில் பொதுக் கட்டமைப்பின் அமுலாக்கமே இவ் ஒப்பந்தத்தின் நோக்கம் நிறைவு செய்யப்பட்டதா? என்பதை நிர்ணயம் செய்வதாக இருக்கும்.

இப்பொதுக்கட்டமைப்பு உடன்பாடானது சர்வதேச நாடுகளின் அவதானிப்பிற்குள் பெரிதும் உட்படுவதற்கான வாய்ப்பு உண்டு.



எனினும் அதற்காக இவ் உடன்பாட்டை அரசாங்கம் முழுஅளவில் நிறைவேற்றும் என்று கூறிவிடமுடியாது. இதற்கு உதாரணங்களும் இல்லாமல் இல்லை.

எடுத்துக்காட்டாக இந்திய-சிறிலங்கா சமாதான உடன்பாடானது தோல்வியடைய அதன் அமுலாக்கத்தில் சிறிலங்கா ஆட்சியாளர்கள் காட்டிய அசிரத்தையும், ஒப்பந்தத்திற்கு மாறான வகையில் காரணம் செயற்பட்டமையுமே ஆகும். இந்திய அரசாங் கம் இவ் ஒப்பந்த விடயத்தில் நடுநிலைமையாகச் செயற்படாது போனது துரதிஷ்டவசமே. ஆயினும் சிறிலங்கா அரசாங்கத்தின் ஒப்பந்த அமுலாக்கத்திற்கு விரோதமான செயலே யுத்தத்திற்குக் காரணமாகியது எனலாம்.

இது ஒருபுறமிருக்க இன்று நடைமுறையிலிருக்கும் யுத்தநிறுத்த உடன்பாடு குறித்து பலரும் கவலையுடன் இருப்பதற்கும், யுத்தம் குறித்து அச்சம் கொள்வதற்கும் சிங்கள ஆட்சியாளர்களே காரணமாகும். அதாவது இந்தயுத்த நிறுத்த உடன்பாட்டின் பல சரத்துக்களை நிறைவேற்ற அரசாங்கம் இன்னமும் தயாராக இல்லை.

இந்நிலையானது யுத்தநிறுத்த உடன்பாட்டையே பலவீனப்படுத்துவதாகவும்- உடன்பாடு முறிவடைந்து விடுமோ என்ற சந்தேகத்தை அடிக்கடி தோற்றுவிப்பதுமாகின்றது. இத்தனைக்கும் இவ்உடன்பாடு நோர்வே தரப்பின் ஏற்பாட்டில்-சர்வதேச யுத்தநிறுத்த கண்காணிப்பாளரைக் கொண்டதாகவும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆகையினால் இப்பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் என்பது சனாதிபதி சந்திரிகாவின் அடுத்தகட்ட நடவடிக்கைகளைப் பொறுத்தே அமையத்தக்கதாகும். அத்தோடு இதன் செயற்பாடானது தென்னிலங்கை அரசியல்சூழ்நிலையினாலும், தீர்மானிக்கத் தக்கதாகவே இருக்கும்.

அதாவது ஜே.வி.பி மற்றும் ஜாதிகஹெல உறுமய போன்றவை பொதுக்கட்டமைப்புச் செயற்பாட்டிற்கு போடமுனையும் முட்டுக் கட்டைகள் ஒருபுறமும்- சனாதிபதி சந்திரிகாவின் சிறுபான்மை அரசாங்கத்தின் எதிர்காலமும் தனித்தனியாகவும், கூட்டாகவுமே பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்தை பாதிக்கத்தக்கவையாக இருக்கும்.

ஆகையினால் பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தாகியமையால் சுனாமி அனர்த்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான புனர்வாழ்வு கிடைத்து விட்டதென அர்த்தம் கொண்டு விட முடியாது. அதன் அமுலாக்கத்தைப் பொறுத்தே அதன் வெற்றி தங்கியுள்ளது.

இது ஒரு புறமிருக்க இச் சுனாமி தாக்கத்தின் பொதுக்கட்டமைப்பானது இனப்பிரச்சினை விவகாரத்தில் எத்தகைய முன்னேற்றத்தை/ பாத்திரத்தை வகிக்கக் கூடியது என்பது இன்று அரசியல் வட்டாரங்களில் அதிகமாக விவாதிக்கப்படும் விவாதப் பொருளாகியுள்ளது. ஆனால் அடிப்படையில் இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்துடன் பொதுக்கட்டமைப்பு விவகாரத்தை தொடர்பு படுத்தல் என்பது பொருத்தப்பாடானதாக இருக்கமாட்டாது.

ஏனெனில் இயற்கை அனர்த்த புனர் வாழ்வுப்பணிகளையும், தமிழ் மக்களின் அரசியல்உரிமைகள் தொடர்பான விவகாரமும் தொடர்பு பட்ட விடயங்கள் அல்ல. இதில் ஒன்று மனிதாபிமானப் பணிபற்றியது. மற்றையது அரசியல் உரிமைகள் தொடர்பானதாகும்.

இவ்விடயத்தில் விடுதலைப்புலிகள் இயக்கம் மிகவும் தெளிவாகவும், உறுதியாகவும் இருப்பதனையே அதன் அறிவிப்புக்கள் வெளிக்காட்டுபவையாகவுள்ளன. ஆனால் ஒன்று இப்பொதுக்கட்டமைப்பு வெற்றியளிக்குமானால் இனப்பிரச்சினைத் தீர்வு நோக்கிய நகர்விற்கு இது சற்றுப்பக்க பலமாக இருக்கும் என்பதே அவர்களின் மதிப்பீடாகவுள்ளது.

**ஜெயராஜ்**

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# 20/06/2005-26/06/2005

## கடந்த வாரத்தில்...

**20**

✤ வடமராட்சியில் சிங்களப் பேரின வாதத்திற்கெதிராக மாபெரும் கண்டனப் பேரணியொன்று நடத்தப்பட்டு தமிழீழத் தேசியத் தலைவர் அவர்களுக்கு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.



✤ புளொட் இயக்கத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் வவுனியா தாலிக் குளம் பகுதியில் சுட்டுக்கொலை.

✤ வவுனியா முகத்தான் குளம் காட்டுப் பகுதியில் இளைஞர் ஒருவரின் சடலம் பொலிசாரினால் மீட்பு.

✤ அம்பாறை மாவட்டம் அக்கரைப் பற்றில் ஈ.பி.டி.பி உறுப்பினர் ஒருவர் வெட்டிக் கொலை.

**21**

✤வாழைச்சேனை புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பணிமனை மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்.

✤ நயினை நாகபூசணி அம்மன் ஆலய தேர்த்திருவிழாவில் கலந்து கொண்ட பக்தர்களை ஏற்றி வந்த வட பிராந்திய போக்குவரத்துச்சபை பேருந்தும் ஹைஏஸ் வான் ஒன்றும் விபத்துக்குள்ளாகி கடலுக்குள் விழுந்ததில் ஒருவர் பலி; 25 பேர் காயம்.

✤ கொழும்பிலிருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணம் செய்து கொண்டிருந்த பயணிகளிடம் சுமார் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான ரொக்கப்பணமும், உடமைகளும் மன்னம்பிட்டி இராணுவ சோதனைச் சாவடிக்கு அருகாமையில் கொள்ளையடிக்கப்பட்டது.

✤ திருகோணமலை மூதூரில் இனந்தெரியாத நபர்களினால் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொலை.

✤ [illegible] கப்படாத இராணுவச்சிப்பாய் விரக்தியடைந்த நிலையில் தன்னைத்தானே சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார்.

**22**

✤ மட்டக்களப்பு அம்பாறை மாவட்டத்தில் தேசிய ரீதியில் வெற்றி பெற்ற கராத்தே வீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு கிளிநொச்சி அரசியல் துறை நடுவப்பணியகத்தில் இடம் பெற்றது.

✤ நோர்வே பிரதிவெளிவிவகார அமைச்சர்கள் தமிழீழவிடுதலைப்புலிகளை கிளிநொச்சி சமாதான செயலகத்தில் சந்தித்துப் பேசியுள்ளனர்.



✤ கிளிநொச்சிக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த நோர்வே பிரதி வெளி விவகார அமைச்சர் ஹெல்கேசனை சந்தித்துத் திரும்பிய யாழ். மாவட்ட மீனவசங்கப் பிரதிநிதிகள் முகமாலை இராணுவ சோதனைச் சாவடியில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைகளிற்கு உள்ளாக்கப்பட்டனர்.

**23**

✤ மட்டக்களப்பு நாவற்குடாவில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் சிறிலங்காப் பொலிசாரினால் மீட்பு.



✤ நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் பிரமதர் மகிந்த ராஜபக்ஷவை அலரிமாளிகையில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

✤ இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் இந்தியா பயணம்.

✤ சனாதிபதி சந்திரிகா கண்டி தலதாமாளிகைக்குச் சென்று அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம சிறீபுத்திரகித்ர தேரரிடம் பொதுக் கட்டமைப்பு ஆவணத்தை கையளித்து ஆசீர்வாதத்தைப் பெற்றார்.

✤ மட்டக்களப்பு - ஊறணிப் பகுதியில் ஒரு தொகுதி ஆயுதங்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டது.

**24**

✤ சுனாமி அனர்த்த மீள்கட்டுமானப் பணிகளுக்கான பொதுக்கட்டமைப்பு உடன்பாடு கைச்சாத்தாகியது. கொழும்பில் சிறிலங்கா அரசு சார்பில் புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு அமைச்சின் செயலர் எம்.எஸ் ஜெயசிங்கவும், விடுதலைப்புலிகளின் தரப்பில் விடுதலைப்புலிகளின் திட்டமிடல் செயலக பிரதிப் பணிப்பாளர் சண்முகலிங்கம் ரஞ்சன் அவர்களும் கைச்சாத்திட்டனர்.

✤ பொதுக்கட்டமைப்பு வரைவு பாராளுமன்றில் சமர்ப்பித்த வேளை ஜே.வி.பி யினர் பெரும் குழப்பம் விளைவித்தனர். இதன் காரணமாக பாராளுமன்ற அமர்வுகள் யூலை ஐந்தாம் திகதி வரை ஒத்திவைப்பு.

✤ பொதுக்கட்டமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டங்கள் இடம் பெற்றன. பொலிசார் ஆர்ப்பாட்டக்காரர்களை கட்டுப்படுத்த கண்ணீர்ப்புகைக் குண்டுகளை பிரயோகித்ததால் ஆத்திரமடைந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிசாரின் இரு வாகனங்களை அடித்து சேதமாக்கினர்.



✤ திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரனின் வீட்டின் மீது கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

✤ பொதுக்கட்டமைப்பை நடைமுறைப் படுத்துகின்ற சூழலிலேயே 2003ஆம் ஆண்டு ஏப்பிரலோடு முடங்கி நிற்கும் சமாதானப் பேச்சுக்களையும் விரைவாக ஆரம்பிக்க வேண்டுமென்று நோர்வேயின் பிரதி வெளி விவகாரத்துறை அமைச்சர் விதார் ஹெல்கேசன் புதுடில்லியில் தெரிவிப்பு.

✤ வலி.வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் தொடர் போராட்டங்களை அடுத்த மாதம் பத்தாம் திகதி முதல் மேற்கொள்ளப் போவதாகத் தீர்மானம்.

✤ அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வாசஸ்தலத்திற்கு வெளியே சந்தேகமான முறையில் நடமாடினாரெனத் தெரிவித்து இளைஞர் ஒருவர் படையினரால் கைது.

✤ உடையார்கட்டுக்குளத்தில் குளிக்கச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கிப் பலி.

**25**

✤ இலங்கை தேசிய மெய்வல்லுனர் போட்டிகளில் பங்கு பற்றி புதியசாதனைகளை நிலை நாட்டி சர்வதேச ரீதியான போட்டிகளில் பங்குகொள்வதற்கு தெரிவாகியுள்ள தமிழீழத்தின் சாதனையாளர்கள் இருவரையும் அவர்களைப் பயிற்றுவித்த பயிற்றுனரையும் தமிழீழ காவல்துறைப் பொறுப்பாளர் நடேசன் கௌரவித்தார்.

✤ வெலிக்கந்தை ஏழாவது கவசவாகனப் படைத்தளத்தில் இராணுவச் சிப்பாய் ஒருவர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக் காகி உயிரிழந்தார்.

✤ தமிழ் மக்களின் உரிமைகளை வழங்க மறுக்கும் சிங்கள பௌத்த பேரின வாதத்தைக்கண்டித்து தென்மராட்சி தமிழ் மாணவர் ஒன்றியத்தினர் மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றினை நடத்தினர்.



✤ சிறிலங்கா அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கைச்சாத்திட்டுள்ள பொதுக்கட்டமைப்புக்கு ஆதரவு தெரிவித்து அம்பாறை மாவட்டம் பொத்துவில் பிரதேசத்தில் கடற்றொழிலாளர்கள் பேரணியொன்றை நடத்தினர்.

**26**

✤ கண்காணிப்புக் குழுவின் வழித்துணையுடன் கிளிநொச்சியிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணித்துக் கொண்டிருந்த அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன் அடங்கிய அரசியல் பணிப்போராளிகளை இலக்கு வைத்து வெலிகந்த, மன்னம்பிட்டி-போவத்த என்னுமிடத்தில் நடத்தப்பட்ட கண்ணி வெடித்தாக்குதலில் போராளியொருவர் காயமடைந்தார்.

✤ காரைநகர் -வியாவில் சனசமூக நிலையத்தால் நடத்தப்பட்ட முன்பள்ளி சிறார்களுக்கான மெய்வல்லுனர் போட்டியின் போது ஏற்றப்பட்ட தமிழீழத் தேசியக் கொடியை இறக்குமாறு அங்கு மது போதையில் வந்த சிறிலங்கா கடற்படையினரும் பொலிசாரும் அங்கு நின்ற பொது மக்களை துப்பாக்கி முனையால் அச்சுறுத்தினர்.

✤ மன்னார் கடலில் குளிக்கச் சென்ற யு.என்.எச்.சி.ஆர் அலுவலர் ஒருவர் நீரில் மூழ்கி மரணம்.

✤ அக்கரைப்பற்று கோமாரியிலுள்ள பொத்துவில் பிரதேச தமிழீழ அரசியல் துறை அலுவலகம் மீது இனந்தெரியாத குழுதாக்குதல் நடத்தியுள்ளது.

✤ பொதுக்கட்டமைப்பை ஆட்சேபித்து சிறிலங்கா விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் திணைக்களத்தின் சிரேஷ்ட உபதலைவர் பதவியிலிருந்து தேசிய ஐக்கிய முன்னணியின் மூத்த உறுப்பினர் எம்.எல்.ஹிஸ்புல்லா இராஜினாமா.

✤ ஆழிப்பேரலை அனர்த்தம் நிகழ்ந்து ஆறு மாதங்கள் பூர்த்தியடைந்ததையொட்டி வடமராட்சியில் உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. கல்முனையிலும் மாணவர்கள் அமைதி ஊர்வலமொன்றை நடத்தினர்.

✤ மட்டக்களப்பு நகரில் மதுபான விநியோகஸ்தர் ஒருவர் அடையாளம் தெரியாத நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் காயம்.

# பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு அணியில் முஸ்லிம்களும் இணைய வேண்டும்

## ஜே. வி. பியின் தலைவர் அழைப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை பொதுக்கட்டமைப்பு எதிர்ப்பு அணியில் முஸ்லிம்களும் இணைய வேண்டும் என்று ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கில் பேசிய அவர் சிறிலங்காவை தமிழீழ விடுதலைப்புலிகள் உள்ளிட்டோர் பிளவுபடுத்த பௌத்தபிக்குகள் அனுமதிக்கக் கூடாது என்றார்.

பொதுக்கட்டமைப்பின் உள்ளடக்கங்களை விவரித்த அவர் இப் பொதுக்கட்டமைப்பானது தமிழீழ விடுதலைப்புலிகள் விமானத்தளம் அமைக்கவும் தமிழர் பிரதேசங்களில் கடற்பரைப்பை நிர்வகிக்கவுமே உதவும் .இது தமிழீழ விடுதலைப்புலிகள் தமிழீழத் தனியரசு இலட்சியத்துக்கே பயன்படும் என்று கூறினார்.

பொதுக்கட்டமைப்பில் முஸ்லிம் மக்கள் புறக்கணிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் 'தனிநாடு கோரி ஆயுதமேந்திப் போராடும் சூழ்நிலை ஏற்படும் என்றார்.

இக்கருத்தரங்கில் பேசிய ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, பொதுக்கட்டமைப்பை எதிர்க்கும் தமிழ், முஸ்லிம் உள்ளிட்ட தரப்பினர் தம்முடன் இணைய வேண்டும் என்றார். பொதுக்கட்டமைப்பை விமர்சித்து வரும் சிறிலங்கா அமைச்சர் மங்கள சமரவீர உள்ளிட்ட சிறிலங்கா சுதந்திரக் கட்சியினரும் தமது போராட்டங்களில் பங்கேற்கமுன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்தார்.

# சட்டிக்குள் இருந்து அடுப்பில் விழுந்த கதையாக ஹிஸ்புல்லாவின் நிலை மாறிவிடக் கூடாது!

## -பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன்

(கொழும்பு)

எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவின் நிலை சட்டிக்குள் இருந்து அடுப்பினுள் விழுந்த கதையாகிவிடக் கூடாது எனப் பிரதி அமைச்சரும் நுவாவின் செயலாளர் நாயகமுமான சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.


தேசிய ஐக்கிய முன்னணிக்கு காலக்கெடு விதிப்பதற்கு ஹிஸ்புல்லாவிற்கு எதுவித அதிகாரத்தையும் நுவா வழங்கவில்லை எனத் தெரிவித்த அவர் அவ்வாறு இருக்கையில் நுவாவுக்கு 48 மணிநேரக் காலக்கெடுவை ஹிஸ்புல்லா விதித்திருக்க முடியாது எனப் பிரதி அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்தார்.

சிவில் விமானப் போக்குவரத்து மற்றும் விமான நிலையத் தலைவர் பதவியில் இருந்து இராஜினாமாச் செய்வதற்கான காரணம் இன்னும் ஓரிரு தினங்களில் வெளிச்சத்திற்கு வந்து விடுமெனத் தெரிவித்த செயலாளர் நாயகம் சேகு இஸ்ஸதீன் பொதுக்கட்டமைப்பு ஆவணத்தில் தனித்தரப்பாக கையெழுத்திடவேண்டுமெனவும் முஸ்லிம்களின் அபிலாசைகள் கருத்தில் எடுக்கப்படவேண்டுமெனவும் அரசிற்குள் இருந்து போராடியபோது கட்சி சார்பில் எதுவித பங்களிப்பையும் செய்யாத ஹிஸ்புல்லா தற்போது திடீரென பதவி துறப்பதாகக் கூறுவது வேடிக்கையானது எனத் தெரிவித்துள்ளார். (32)

# நீங்காத நினைவலைகளில்...

## 07 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

தாயின் மடியில் 09.10.1971



தாயகமண்ணில் 29.06.1998

தமிழீழ காவல்துறை
பரிசோதகர் கார்த்தியாயினி
தேவராஜா கார்த்தியாயினி

இல.40,சபாபதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்

தாயின் மடியில் 23.02.1975



தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் கீதா
மாயகிருஸ்ணன் கீதா

கஜேந்திரமூர்த்தி வீதி,
பொலிகண்டி கிழக்கு,
பொலிகண்டி.

மீளாத்துச்சேனை, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றி வளைப்பின் போது ஏற்பட்ட நேரடி மோதலில் 29.06.1998 அன்று வீரச்சாவடைந்தனர்.

## 09 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

தாயின் மடியில் 19.12.1976



தாயகமண்ணில் 18.06.1996

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் அன்ரனி கமல்ராஜ்
கீதபொன்கலன்அன்ரனிகமல்ராஜ்

02 ஆம் வட்டாரம்காம்றோட்,
ஊர்காவற்றுறை,
யாழ்ப்பாணம்.

தாயின் மடியில் 01.02.1976



தாயகமண்ணில் 17.06.1996

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் சசிக்குமார்
நவரத்தினம் சசிக்குமார்.

தெல்லிப்பளை,
யாழ்ப்பாணம்.

வவுனிக்குளம் பயிற்சி முகாமில் ஏற்பட்ட விபத்தின் போது சாவடைந்தனர்.

தலைவனின் வழியிலே தழைகள் விலகிட
தலைமேல் பணி ஏற்று நடந்தீர்
நிலைகள் உயர தமிழீழம் மலர்ந்திட
தலைவன் காட்டிய சமூகப்பணி ஆற்றி மறைந்தீர்

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டினீர் - தலைவன்
திட்டம் போல தேசியம் காத்து திருவிளக்காகினீர்
காவல்செய்து பகை விரட்டி ஓட்டினீர் - தமிழீழ
காவல்துறையாய் மலர்ந்து மக்கள் துயர் துடைத்தீர்

மக்கள் சேவையே மா சேவை எனக்காட்டினீர்
மக்கள் படும் துயரங்களில் பகிர்ந்து கொண்டீர்
தமிழீழ தனியரசின் கட்டுமானத்துறையில் இணைந்தீர்
தமிழீழ காவல்துறையைக் கட்டிக்காத்து வளர்த்தீர்

தக்கது எது தகாதது எது என மாந்தர்க்குப்
பக்குவம் புகட்டினீர்
குற்றமது புரிவது எவ்வகைக் குற்றமென மாந்தர்
கற்றுணர வழிகாட்டினீர்.

## 11 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

தாயின் மடியில் 07.02.1972




தாயகமண்ணில் 07.04.1994

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் சுதாகரன்
காங்கேசு சுதாகரன்.

முதளைக்குழி,
வரணவாய் தெற்கு,
கரவெட்டி,
யாழ்ப்பாணம்.

தாயின் மடியில் 10.05.1974



தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர்
தயானந்தன்
சிவானந்தராசா தயானந்தன்

வீரபத்திரர் கோவிலடி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம்.

இளமருதங்குளம் பகுதியில் விசேட கடமையின்போது, சிறிலங்கா இராணுவத்தினரால் பதுங்கியிருந்து தாக்கியதில் 07.04.1994 அன்று வீரச்சாவடைந்தனர்.

## 05 ஆம் ஆண்டு நீங்காத நினைவலைகள்...

தாயின் மடியில் 12.10.1977



தாயகமண்ணில் 02.04.2000

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர் விஜயன்
கதிரவேலு விஜயன்

பெரியதம்பிராய் வீதி,
இமையாணன்,
உடுப்பிட்டி

தாயின் மடியில் 12.12.1979



தாயகமண்ணில் 14.05.2000

தமிழீழ காவல்துறை
தலைமைக்காவலர்
பிரான்சிஸ் மனோகரன்
அப்பலோப்பர் பிரான்சிஸ் மனோகரன்

இரணைமாதா நகர்,
இரணைதீவு,
முழங்காவில்.

ஓயாத அலைகள்-03 இராணுவ நடவடிக்கையின் போது கிளாலி, எழுதுமட்டுவாள் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான நேரடி மோதலின்போது வீரச்சாவடைந்தனர்.

**இம் மாவீரர்கட்கும் இந்நாளில் வீரச்சாவடைந்த ஏனைய மாவீரர்களிற்கும்
எமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்**

**தமிழீழ காவல்துறையினர்**

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# எரிபொருள் விலை உயர்வைக்கண்டித்து தமிழகத்தில் பாரவூர்திகள் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியாவில் பெற்றோல், டீசல் விலை உயர்வைக் கண்டித்து பார வூர்தி உரிமையாளர்கள் தமிழகத்தில் நேற்று வேலைநிறுத்தப் போராட்டத் தில் ஈடுபட்டனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று நள்ளிரவு வரை இப் போராட்டம் கடைப்பிடிக்கப்பட்டது.

தமிழகத்திலுள்ள ஒரு இலட் சத்து நாற்பதாயிரம் பாரவூர்திகள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்றன.

இவர்களுடன் ஆட்டோ உரி மையாளர்களும், வான் உரிமை யாளர்களும் போராட்டத்தில் பங்கு கொண்டனர்.

## AAT கற்கைநெறி மாணவர்களுக்கான அறிவித்தல்

முகாமைத்துவ கல்லூரியினால் நடைமுறைப்படுத்தப்படும் AAT கற்கைநெறி கட்டம் I புதிய பிரிவுகளுக்கான விரிவுரைகள் 02.07.2005 சனிக்கிழமை பி.ப 1.00 மணிக்கு ஆரம்பமாகின்றது. எனவே மேற்படி கற்கைநெறியைப் பயில்வதற்கு பதிவினை மேற் கொண்டோர் விரிவுரைக்குச் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள் கின்றோம்.

நிர்வாகம்,
முகாமைத்துவக் கல்லூரி.
கரடிப்போக்கு,
கிளிநொச்சி.

(சி.12241)

## கண்ணீர் துளி விழியுடன் அகவை நினைவில்

மலர்வு:-29 - 06 - 1975
உதிர்வு:-01 - 11 - 2001



*நீர் எம்மை விட்டு*
*மறைந்த போதும் உனது*
*நினைவுகள் அழியவில்லை!*
*உமை இழந்து நிற்கும்*
*எமது இதயதவிப்பை*
*அறிவீரோ!*
*இந்நாளில் உமது*
*ஆத்ம நினைவுகளில்......*

பாச உறவுகள



**திருமதி. சி. கோமுகி (ஜினா)**

பருத்தித்துறை (ஆசிரியை–கொக்கிளாய் அ.த.க.பாடசாலை)

(6307)

## தமிழீழப் போக்குவரவுக்கழகம்

### ஓட்டுநர்(பயிலுநர்) பணிக்கான விண்ணப்பம்கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் ஓட்டுநர் (பயிலுநர்) பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

தகைமைகள் :-

01. கல்வித்தகைமை :- ஆண்டு 08.
02. அகவை :- 23 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்.
04. நிறை :- 55 Kg

குறிப்பு:-

01. விண்ணப்ப முடிவு நாள் :- 15.07.2005
02. விண்ணப்பதாரருக்கான நேர்முகத்தேர்வு 17.07.2005 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்குவரவுக் கழக நடுவப்பணிமனையில் நடைபெறும்.
03. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
04. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை, புளியங்குளம் ஆகிய இடங்களில் உள்ள நேரக்கணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**விண்ணப்பம் அனுப்பவேண்டிய முகவரி:**

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப் போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி.12240)

## காந்தருபன் அறிவுச்சோலை-சிறுவர் இல்லம் பணிநிலை வேண்டுகை

பதவிகள்:-

01 பராமரிப்பாளர்கள்– இரு பாலாரும் (30 வயதிற்கு மேலாக இருக்க வேண்டும்)
02 கணக்குப் பதிவாளர் –01 (A/L தகைமை தேவை)
03 ஆசிரியர்கள் – எல்லாப் பாடங்களுக்கும் (A/L தகைமை தேவை)
04 விஞ்ஞான ஆய்வு கூட ஆசிரியர்–01 (A/L தகைமை தேவை)
05 களஞ்சியக் காப்பாளர்–01
06 சாரதி–01 (இரண்டு வருட அனுபவம் தேவை)
07 இயந்திரங்கள் இயக்குபவர்–01
08 AC,DC மின் இணைப்பு தெரிந்தவர்–01
09 விவசாயம், மிருகவளர்ப்பு தொடர்பான பணியாளர்கள்–04 (தொழில் அனுபவம் தேவை)

நேர்முகத் தேர்வு:-

03.07.2005 ஞாயிறு
காலை–9.00–பி.ப 4.00 மணி வரை

இடம்:-

காந்தருபன் அறிவுச்சோலை
அலுவலகம்
கைவேலி– புதுக்குடியிருப்பு

குறிப்பு:-

01 விண்ணப்பங்கள் நேர்முகத் தேர்வு அன்றே பெறப்படும்.
02 தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தரவும்.
03 குறித்த நாளில் தோற்றமுடியாதவர்கள் முற்கூட்டியே அறியத்தரவும்

நிர்வாகச் செயலகம்
காந்தருபன் அறிவுச்சோலை

(5943)

## நகரசபை, சாவகச்சேரி

### கேள்வி அறிவித்தல்

கீழே குறிப்பிடப்படும் வேலைகளுக்கான கேள்விகள் என்னால் 06.07.2005 ஆம் திகதி 10.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றைய தினம் 10.30 மணிக்கு கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும்.

வேலை ஒன்று, வேலை இரண்டின் பொருட்டு முறையே நிர்மாணப்பயிற்சி நிலை யத்தின் (இக்ராட்) தரம் எம்9, தரம் எம்7 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்குத் தகுதியுடையவராவார்.

ஒப்பந்தப்பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப்பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்டதுமான வேலைகளின் விபரங்கள் அடங்கியதுமான பதிவுப்புத்தகத் தைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| வேலை விபரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூ.ச | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் (வற்றுடன்) ரூ.ச |
|---|---|---|
| 01. வேலாயுதம் வீதி திருத்தம் | 3,400.00 | 575.00 |
| 02. சாவகச்சேரி நவீன சந்தை மேல் மாடி புனரமைப்பு | 31,000.00 | 575.00 |

கேள்விப்பத்திரங்களைச் சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் 04.07.2005 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிவரை கேள்வி வைப்புப்பணத்தையும், கேள்விப்படிவக்கட்டணத்தையும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

,கேள்விப்படிவங்கள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி செயலாளர், நகரசபை, சாவகச்சேரி என்ற முகவரிக்கும், இணைப்பிரதி பி/உள்ளூராட்சி உதவி ஆணையா ளர், செட்டித்தெரு, யாழ்பாணம் என்ற முகவரிக்கும் 06.07.2005ஆம் திகதிக்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். உறையின் இடது பக்க மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ள லாம்.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
2005.07.27

(சி.12242)

(திருமதி.கு.ஆறுமுகம்)
செயலாளர்,
நகரசபை, சாவகச்சேரி)

## அஸ்ரா கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடர்
## ஸ்கந்தவரோதயாவை எதிர்த்தாடுகிறது கிளி.ம.வி.

பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்று வரும் அஸ்ரா கிண்ணக் கிரிக்கெட் போட்டித்தொடரில் 17வயது பிரிவினருக்கான போட்டி ஒன்றில் யாழ். ஸ்கந்தவரோதயா கல்லூரி 17 வயது பிரிவு அணியை கிளிநொச்சி மகாவித்தியாலய 17வயது அணி எதிர்கொள்கின்றது.

கிளிநொச்சி மத்திய விளையாட்டு மைதானத்தில் இன்று காலை இப்போட்டி ஆரம்பமாகும் என தெரிவிக்கப்படுகின்றது.

இதற்காக ஸ்கந்தவரோதயா கல்லூரி அணி நேற்று கிளிநொச்சிக்கு வருகைதந்தது.

மேற்படி அஸ்ராக் கிண்ணப்போட்டியில் ஏற்கனவே கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் கிளிநொச்சி ம.வி. அணி யாழ் யூனியன் கல்லூரி அணியிடம் தோல்வியடைந்த நிலையில் இப் போட்டியில் வெற்றிபெற கடுமையாக போராடும் என எதிர் பார்க்கப்படுகின்றது.

## இலங்கை கால்பந்து வரலாற்றில் பார்வையாளர் இல்லாத போட்டி

இலங்கையின் கால்பந்தாட்ட வரலாற்றில் முதன் முறையாக காலப்பந்தாட்ட போட்டி ஒன்று பார்வையாளர்கள் அற்ற நிலையில் நடத்தப்படவுள்ளது.இன்றையதினம் இந்தப்போட்டி சுகததாஸ உள்ளரங்கில் நடத்தப்படவுள்ளதாக இலங்கை கால் பந்தாட்ட சங்கம் தெரிவித்துள்ளது. நேற்று முன் னம் இலங்கை வான்படை அணிக்கும் நியூயங் அணிக்கும் இடையில் போட்டி நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் வான்படையினர் ஆயுதங்களுடன் வந்து யூத் யங் அணியின் வீரர் ஒருவரை கைது செய்தனர். குறித்த வீரர் படையில் இருந்து தப்பிவந்தவர் எனக்குற்றம் சுமத்தியே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.இது கால்பந்தாட்ட ஒழுங்கை மீறும் செயல் எனக்குறிப்பிட்டுள்ள இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனம் கடந்த உலக கிண்ணப் போட்டிகளின் போது வடகொரியா மற்றும் தென்கொரிய அணிகளுக்கிடையிலான போட்டி மூடிய நிலையில் இடம்பெற்றதைப் போன்றே இன்றைய போட்டியை தாம் நடத்தப் போவதாக தெரிவித்துள்ளது. இதன்அடிப்படையில் வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இரண்டு அணிகளினதும் முகாமையாளர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரே மைதானத்துக்குள் அனுமதிக்கப்படவுள்ளனர்.



படத்தில் பந்தை விரட்டிச்செல்லும் இந்த வீராங்கனைக்கு வயது 47. பெயர் மார்டின் டிலேன்லி. இதில் என்ன விஷேசம் என்கிறீர்களா.! இவர் இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் பெண்ணாக மாறினார். 25ஆண்டுகள் ஆண்கள் பிரிவில் விளையாடிய இவருக்கு பெண்கள் பிரிவிலும் விளையாட அவுஸ்திரேலியப் பெண்கள் கால்பந்து சங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

## சுழற்பந்து ஜாம்பவான் வோர்ன் மனைவியை விட்டு பிரிந்தார்



அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் ஷேன் வோர்ன் தனது மனைவி சிமோனேவை விட்டுப் பிரிந்தார். டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் அதிக விக்கெட்டுக்களை கைப்பற்றி உள்ளவரும் அவுஸ்திரேலிய அணியின் முன்னணி சுழற்பந்து வீச்சாளர்களில் ஒருவருமானவர் ஷேன்வோர்ன்.

சாதனைகள் பலவற்றிற்கு சொந்தக்காரரான வோர்ன் அவ்வப்போது சிக்கல்களில் சிக்கிக் கொள்வது வழக்கம். குறிப்பாக பெண்கள் விடயத்தில் பலவீனமான வோர்ன் சமீபத்தில் கூட இங்கிலாந்தில் பெண் தொடர்பான விவகாரத்தில் சிக்கியிருந்தார்.

வோர்னின் தொடர் பாலியல் விளையாட்டை இதுவரை பொறுத்து,பொறுத்துப் பார்த்த அவரது மனைவி சிமோனே வெறுப்பின் எல்லைக்கே சென்று விட்டார். இதன் உச்சக்கட்டமாக வோர்னும் சிமோனேயும் பிரிந்து வாழ்வது என முடிவு செய்து அதை அறிவித்தனர். அந்த அறிவிப்பின்போது தாங்கள் நண்பர்களாகவே பிரிவதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## முக்கோண கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக பந்து வீசுவேன்—பாலாஜி



'இலங்கையில் நடைபெற உள்ள மூன்று நாடுகள் கிரிக்கெட் போட்டியில் சிறப்பாக பந்து வீசுவேன்' என்று வேகப்பந்து வீச்சாளர் எல். பாலாஜி கூறியுள்ளார்.

இந்தியா, இலங்கை மேற்கிந்தியத்தீவுகள் பங்கேற்கும் ஒருநாள் கிரிக்கெட் போட்டி இலங்கையில் யூலை 30 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் ஒன்பதாம் திகதி வரை நடக்கிறது. இந்தப் போட்டிக்கான இந்திய பயிற்சி அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் இந்திய வேகப் பந்து வீச்சாளர்களுக்கான பயிற்சி முகாம் பெங்களூரில் தேசிய கிரிக்கெட் அக்கடமியில் நேற்று முன்தினம் தொடங்கியது யூலை நான்காம் திகதி வரை இந்த பயிற்சி முகாம் நடைபெறுகிறது. இதில் எல்.பாலாஜி, அகர்கர், எஸ்.எஸ்.பால்,ரணாதீப்போஸ், ஸ்ரீசந்த், முனாப் பட்டேல், ஆர்.ஜேசு ராஜ், அமித்பண்டாரி, சித்தார்த் திரிவேதி, ஜோஜிந்தர் சர்மா, ககன் தீப்சிங், ஹர்விந்தர்சிங் ஆகியோர் பங்கேற்றுள்ளனர். இங்கிலாந்தில்கவுண்டிப்போட்டிகளில்ஆடுவதால் இர்பான் பதானுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. சாஹிர்கான், ஆசீஷ நெக்ரா, ஜெய்பிரகாஷ் யாதவ் ஆகியோர் நேற்று முன்தினம் காலையில் முகாமுக்கு வந்து சேரவில்லை. முகாமில் உடல் தகுதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும், பயிற்சியாளர் கிரேக்சப்பல், வேகப்பந்து வீச்சாளர்களுடன் முதல்முறையாக கலந்துரையாடுகின்றார்.



கார்ஸன் நகரில் நடந்த அமெரிக்க தடகள போட்டிகளில், பெண்களுக்கான 100 மீற்றர் தடைஓட்டப்பிரிவில் மிசெலி பெரி (நடுவில்) முதலிடம் பெற்றார். அருகில் இரண்டாம் இடம்பெற்ற ஹேய்ஸ்.

## எனக்கு எது நல்லது கெட்டது என்பதை நானே முடிவெடுப்பேன் -சச்சின் சொல்கிறார்



நிறைய விடயங்களில்எனக்காக மற்றவர்கள்முடிவு எடுத்து விடுகின்றனர்.எனக்கு எது நல்லது என்று நான்தான் முடிவு எடுக்க வேண்டும், என்று காட்டமாகக் கூறுகின்றார் சச்சின் டெண்டுல்கர்.

காயத்துக்காக(டென்னிஸ் எல்போ) சத்திர சிகிச்சை செய்து கொண்ட சச்சின் ஓய்வில் உள்ளார்.எனது காயத்துக்கு எடை அதிகமான துடுப்பை பயன்படுத்தியது தான் காரணம் என்கிறார்கள்.மீண்டும் களமிறங்கும்போது எடை குறைவான துடுப்பு பயன்படுத்துவேன் என்கிறார்கள். இப்படி எனக்காக மற்றவர்கள் முடிவு எடுக்கிறார்கள். எனக்கு எது நல்லது என்று யோசித்து நான் தான் முடிவு எடுக்க வேண்டும். கடந்த 16ஆண்டுகளாக ஒரே மாதிரியான துடுப்பைத் தான்பயன்படுத்திவருகிறேன். இதற்கு அணியின் வைத்தியர்களும் ஆட்சேபம் தெரிவிக்க வில்லை.

புதிய விதிமுறைகளால் ஒருநாள் போட்டியில் மாற்றம் ஏற்பட்டுள்ளது. இனி வழக்கமான போட்டியாக இருக்காது. மாற்று வீரர் களத்தடுப்பு வியூகத்தில் செய்யப்பட்டுள்ள மாற்றங்களால்முறையாக திட்டமிடுதல் மிகவும் அவசியம். சோதனை ரீதியான புதிய விதிமுறைகளால் போட்டிகள் எந்த அளவுக்கு வித்தியாசமானதாக இருக்கும் என்று தெரியவில்லை. இரண்டு போட்டிகளில் விளையாடிப் பார்த்தால் தான் மாற்றங்கள் புரியவரும் என்கின்றார் சச்சின்.


## சிம்பாப்வேக்கு எந்த அணியும் செல்லக்கூடாது ஆதரவு திரட்டுகிறார் நியூசிலாந்து அமைச்சர்

சிம்பாப்வேக்கு எந்த ஒரு அணியும் செல்லக் கூடாது என்று சர்வதேச கிரிக்கெட் சபையிடம் தாம் விடுக்கும் கோரிக்கைக்கு இங்கிலாந்து, அவுஸ்திரேலிய நாடுகளும் ஆதரவு தெரிவிக்க வேண்டும் என நியூசிலாந்து வெளிநாட்டமைச்சர் கோரிக்கை விடுத்துள்ளார். வரும் ஓகஸ்டில் சிம்பாப்வேக்கு நியூசிலாந்து அணி சுற்றுப்பயணம் மேற்கொள்ளவிருப்பதற்கு முன்பு நிறைவேற வேண்டும் என எண்ணுகிறார்.


அவர் மனித உரிமைகள் மறுக்கப்படும் நாடொன்றில் ஏனைய நாட்டு வீரர்கள் விளையாடக்கூடாது என்று அவர் கூறியுள்ளார்.

சிம்பாப்வே ஆட்சியாளரான முகாபேயின் ஆட்சிக் காலத்தில் அங்கு இரண்டு இலட்சம் பேர் வீடுகளையிழந்து அகதியாகினர். அங்கு மனித உரிமைகள் பேணப்படுவதில்லை என்று வெளிநாட்டமைச்சரான பில்கொப் தெரிவிக்கிறார்.

எனினும் சர்வதேச கிரிக்கெட்சபை இதற்கு பொறுப்பு வகிக்கப்போவதில்லை என தெரிவித்துள்ளது. சபையின் விதிமுறையின் படி அணியொன்று ஒரு நாட்டுடன் போட்டிகளில் பங்கேற்க வேண்டும். இல்லையேல் இரண்டு மில்லியன் டொலர்கள் அபராதம் விதிக்கப்படும். நியூசிலாந்து அரசு அணியை அனுப்பும் தேவையுமில்லை அதேவேளை தடைசெய்யவுமில்லை எனினும் அபராதத்தில் இருந்து காப்பாற்றலாம். சர்வதேச கிரிக்கெட்சபை அங்கு நடக்கும் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்பேற்காது. எனினும் நியூசிலாந்து அரசு ஐ.சி.சி யிடம் அபராதத்தை தளர்த்துமாறு கேட்கலாம் என்றும் தெரிவிக்கப் படுகிறது.



காான்படரேசன் கால்பந்து போட்டியில் மெக்சிக்கோவுக்கு எதிரான அரையிறுதிப் போட்டியில் கோல் அடித்த மகிழ்ச்சியில் ஆர்ஜன்ரீனா வீரர் லுசியானோ.



கலிபோர்னியாவின் சான்டா கிளாரா நகரில் நீச்சல் சாம்பியன்ஷிப் போட்டிகள் நடந்து வருகின்றன. இதில் பெண்களுக்கான 50 மீற்றர் ப்ரீஸ்டைல் நீச்சல் பிரிவில் வெற்றியை நோக்கி வீராங்கனைகள்.

## முன்னாள் டெஸ்ட் வீரர் மரணம்


முன்னாள் டெஸ்ட் கிரிக்கெட் வீரர் ஏக்னாத் சோல்கர் மும்பையில் கடந்த ஞாயிறன்று மரணமடைந்தார். துடுப்பாட்ட வீரர்கள் அருகில் நின்று களத்தடுப்புச் செய்வதில் வல்லவரான சோல்கர் 53 பிடிகளை எடுத்துள்ளார். சகல துறை வீரராகத் திகழ்ந்த சோல்கர் 1948 ஆம் ஆண்டு மும்பையில் பிறந்தார்.

1969-1976-77 வரை 27 டெஸ்ட் போட்டிகளில் ஆடியுள்ள சோல்கர் 1070 ஓட்டங்களை எடுத்துள்ளார்.18 விக்கெட்டுக்களையும் கைப் பற்றியுள்ளார்.



பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

## சிந்தனைக்கு



இன்றைய உலக ஒழுங்கை பலம் தான் நிர்ணயிக்கிறது.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 29-06-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் natham23 ela@ yahoo.com

# உத்தரவாதமில்லை!

ஆழிப்பேரலை அனர்த்த மீள் கட்டுமானத்திற்கென பொதுக் கட்டமைப்பில் அரசாங்கத் தரப்பும் - விடுதலைப்புலிகள் தரப்பும் கைச்சாத்திட்டுள்ள நிலையில் சிறிலங்கா இராணுவப் பாதுகாப்புடன் சென்ற விடுதலைப்புலிகளின் தொடரணி தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளமை மக்கள் மனங்களில் துளிர்விட்ட சில நம்பிக்கைகளைக்கூடக் கருகச் செய்துள்ளது என்றே கூறலாம்.

சுனாமிப் பொதுக்கட்டமைப்பில் அரசாங்கம் கைச்சாத்திட்டமை சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படலாம் என்ற நம்பிக்கையை மக்கள் மத்தியில் சற்று ஏற்படுத்தியிருந்து. அதாவது இவ் உடன்பாடு புரிந்துணர்தலை அதிகப்படுத்துவதற்கும், யுத்த நிறுத்தத்தை வலுப்படுத்துவதற்கும் உதவும் என எதிர் பார்க்கப்பட்டது.

ஆனால் கடந்த ஞாயிற்றுக்கிழமை வெலிக்கந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் வாகனத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலானது இத்தகைய நம்பிக்கையை/எதிர்பார்ப்பைச் சிதறடிப்பதாகியுள்ளது. வேறொரு விதத்தில் பார்த்தால் நிலைமை மேலும் மோசமாகியுள்ளது என்றே கூறுதல் முடியும்.

விடுதலைப்புலிகள் மீது சிறிலங்கா ஆயுதப் படை நிழல் யுத்தம் ஒன்றை நடத்தி வருகின்றது என்பது வெளிப்படையானது. இதில் முக்கிய பங்கு வகிக்கும் சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறை தமிழ் இனத் தேச விரோதக் குழுக்களின் பெயரில் இவ் யுத்தத்தை நடத்த விளைந்து நிற்பதும் வெளிப்படையானது.

இந் நிழல் யுத்தமானது போர் நிறுத்த உடன்பாட்டையே கேள்விக்குள்ளாக்கி வந்ததோடு, அமைதிச் சூழ்நிலைக்கும் பெரும் பாதிப்பை விளைவிப்பதாக இருந்துள்ளது. ஆனால் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் வரையறுக்கப்பட்ட எல்லைகள் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கு அரசாங்கம் விசுவாசமாக இல்லாமை போன்றவை இவ் நிழல் யுத்தத்தை முடிவிற்கு கொண்டு வரவோ இதன் பின்னணி வெளிவரவோ வாய்ப்பு இல்லாமல்போனது.

இவ்வாறு இருந்தும் யுத்த நிறுத்த உடன்பாடு முடிவிற்கு வந்து விடாது ஓரளவேனும் செயற்பாடு கொண்டதாகவே இருந்து வந்கிறது. ஆனால் அண்மைய சம்பவங்கள் யுத்த நிறுத்த உடன்பாட்டை மட்டுமல்ல யுத்த நிறுத்தக் கண்காணிப்பாளரின் செயற்பாட்டையும் அர்த்தமற்றவையாக்கும் அளவிலானதாக மாறியுள்ளது.

அதாவது கடந்த காலத்தில் சிறிலங்கா அரசு நடத்திய மறைமுகப் போரானது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு அற்ற வேளைகளில் அவர்களின் கண்காணிப்பிற்கு உட்படாத பகுதிகளில் நடாத்தப்பட்டது. ஆனால் தற்பொழுது வெலிக்கந்தப் பகுதியில் நடத்தப்பட்ட தாக்குதலானது கண்காணிப்புக் குழுவினர் முன்னிலையில் நடாத்தப்பட்டுள்ளது.

ஆகையினால் இத் தாக்குதலானது கடந்த காலத் தாக்குதல்களிலிருந்து வேறுபட்ட தகவல் ஒன்றையும் வெளிப்படுத்தியுள்ளது. அதாவது கண்காணிப்பு குழு என்பது பொருட்படுத்தப்பட வேண்டியதுதொன்றல்ல என்பதே அதுவாகும். அது மட்டுல்ல கண்காணிப்புக் குழுவினரின் உயிருக்கும் உத்தரவாதமில்லை என்பது.

இது ஒரு புறம் இருக்க வெலிக்கந்தப் பகுதியில் நடாத்தப்பட்ட தாக்குதலுக்கு யார் பொறுப்பு? என்பதற்கான தடயங்களும் கண்டறியப்பட்டதாக இல்லை. ஆகையினால் தற்பொழுது உள்ள கேள்வியானது போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இத்தாக்குதல் குறித்து விடப்போகும் அறிக்கை எத்தகையது? என்பதே. அதாவது கடந்த காலத்தாக்குதல்களின் போது விடுக்கப்பட்டது போன்று இனந்தெரியாத குழுவினரின் தாக்குதல் என்றா?

ஆனால் இத்தாக்குதல் சிறிலங்கா ஆயுதப்படையினரின் ஒத்துழைப்பு இன்றி மேற்கொள்ளப்பட்டிருக்கமாட்டாது. இதனை அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிற்கு எழுதிய கடிதத்தில் இருந்து புரிந்து கொள்ளமுடியும் அத்தோடு இனி வரும் நாட்களில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் அனுசரணையுடனான போக்குவரத்திலும், பாதுகாப்பிற்கு உத்தரவாதம் என்பது கேள்விக் குள்ளாகியுள்ளது.

இந்த வகையில் யுத்தநிறுத்தமானது பெரும் சவாலை நோக்கியதாகச் சென்றுகொண்டுள்ளது என்பதே யதார்த்தமானதாய் உள்ளது. அரசாங்கம் இதனை திட்டமிட்ட ரீதியிலேயே மேற்கொள்கின்றதென்பதை யாராவது ஏற்க மறுத்தால் அவர்கள் சிங்கள ஆட்சியாளர்களை இன்னமும் புரிந்துகொள்ளாதவர்களாகவே இருக்க முடியும்.

# சனாதிபதி வேட்பாளர் பிரச்சினையால் சு.க.வின் விளக்கக் கூட்டம் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நிர்வாகிகளுக்காக கூட்டப்பட்ட பொதுக் கட்டமைப்பு விளக்கக்கூட்டம் சனாதிபதி வேட்பாளர் பிரச்சினையால் சர்ச்சையுடன் முடிவடைந்துள்ளது.

கடந்த ஞயிற்றுக்கிழமையன்று எம்பிலிப்பிட்டியவில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தேர்தல் ஒருங்கிணைப்பாளர்கள், நகரசபை மற்றும் பிரதேசசபை உறுப்பினர்கள் பங்கேற்ற கூட்டம் நடைபெற்றது. சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் மைத்திரிபால சிரிசேன தலைமையில் நடைபெற்ற இந்தக்கூட்டம், பொதுக் கட்டமைப்பு குறித்து விளக்குவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் களனி பிரதேசசபை உறுப்பினர் காமினி குணரட்ண திடீரென எழுந்து பிரதமர் மகிந்த ராஜபக்ஷவை சனாதிபதி வேட்பாளராக அறிவிக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியைப்போல் சுதந்திரக்கட்சியும் சனாதிபதித் தேர்தல் பணிகளை முன்னெடுக்க வேண்டு மென்றும் வலியுறுத்தினார்.

இதனால் கூட்டத்தில் சலசலப்பு ஏற்பட்டது. இரத்தினபுரி சுதந்திரக் கட்சி செயலாளர் சானி சமரசிங்க இதற்கு ஆட்சேபம் தெரிவித்தார். இந்தக்கூட்டம் பொதுக்கட்டமைப்பு தொடர்பானதே தவிர சனாதிபதி வேட்பாளர் தெரிவுக்கூட்டம் அல்ல என்று வாதிட்டார். இதையடுத்து சுதந்திரக்கட்சி உறுப்பினர்களிடையே யார் வேட்பாளர் என்பது குறித்து கடும் வாக்குவாதம் நடந்தது. இதனால் விசனமடைந்த மைத்திரிபால சிரிசேனஇக்கூட்டத்தை ஒத்திவைப்பதாகக் கூறிவிட்டு வெளியேறினார்.

# ஒரேநாளில் கூட்டரசாங்கத்தை இல்லாதுஒழிக்க எம்மால் முடியும்

## -ஜே.வி.பி.பிரச்சார செயலர் எச்சரிக்கை

(கொழும்பு)

ஒரே நாளில் கூட்டரசாங்கத்தை நாட்டில் இல்லாதொழிப்பதற்கு எம்மால் முடியும் என ஜே.வி.பி. யின் பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகமொன்றுக்கு கருத்துவெளியிட்டுள்ள அவர் மேலும் கூறியதாவது:-

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. அங்கத்தவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் எடுப்பதற்கு எவருக்கும் உரிமை கிடையாது. அப்படி சிறுபிள்ளைத்தனமாக நடப்பதற்கு தற்பொழுது அரசாங்கத்தில் அங்கம் வகிப்பவர்கள் எம்மால் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தை நன்கு பரிசீலனை செய்ய வேண்டும். ஒரே நாளில் கூட்டு அரசை நாட்டில் இல்லாதொழிப்பதற்கு எம்மால் முடியும்.

கூட்டு ஒப்பந்தத்தின் படி ஒரு கட்சி அரசிலிருந்த விலகியதாக தேர்தல் ஆணையாளாருக்கு அறிவித்தால் சட்ட பூர்வமாக கூட்டு அரசாங்கம் இயக்க முடியாது என ஜே.வி.பி. பிரச்சார செயலாளர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

# பதவிவிலகிய அமைச்சர்களின் அதிகாரங்கள் செயலாளர்கள் வசம்

இராஜினமாச் செய்த அமைச்சர்களின் அமைச்சுக்களில் முடிவுகளை எடுக்கக்கூடிய சில அதிகாரங்களை அந்த அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வழங்கியுள்ளார்.

ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திலிருந்து விலகியதையடுத்து தமது பதவிகளை இராஜினாமாச் செய்த ஜேவி.பியின் நான்கு அமைச்சர்கள் மற்றும் அமைச்சர் மங்கள சமரவீர இராஜினாமாச் செய்த ஊடக அமைச்சு ஆகிய வற்றில் முக்கிய தீர்மானங்களை எடுக்கக்கூடிய சில அதிகாரங் களையே சனாதிபதி அந்த அமைச் சுக்களின் செயலாளர்களுக்கு வழங் கியுள்ளார்.

குறித்த அமைச்சுக்களில் உடனடி முடிவுகளை எடுத்து விடயங்களை செயற்படுத்துவது சம்பந்தமான அதிகாரங்களையே சனாதிபதி இவர்களுக்கு வழங்கியுள்ளார்.

# ஆழிப்பேரலை நிதிப்பகிர்வில் அரசு மீது உலகவங்கி அதிருப்தி

## ஜி. எல். பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆழிப்பேரலை நிவாரண நிதிப் பகிர்வில் சிறிலங்கா அரசு மீது உலக வங்கி அதிருப்தியாக இருப்பதாக ஐக்கிய தேசியக்கட்சியின் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

மொறட்டுவ பிரதேச மக்களுக்கு ரூபா.850,000 மதிப்பிலான உபகரணங்களை ஜி. எல். பீரிஸ் அறக் கட்டளை சார்பில் வழங்கினார்.

இதுதொடர்பான நிகழ்ச்சியில் பேசிய பீரிஸ், மொறட்டுவ உள்ளிட்ட ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் நிவாரண உதவி கோரி பாரிய போராட்டங்களை நடத்தி வரு வதைச் சுட்டிக்காட்டியதோடு, இந்த நிலையால்தான் உலக வங்கியின் பிரதித்தலைவர் தனது அறிக்கையில், ஆழிப்பேரலை நிவாரண உதவிகளை கையாளுவதில் சிறிலங்கா அரசு மீது அதிருப்தி தெரிவித்துள்ளார் என்றார்.

# மின்நிலையம் அமைக்க இந்தியா முயற்சி

(கொழும்பு நிருபர்)

சிறிலங்காவில் மின்நிலையம் அமைக்க இந்தியாவின் அரச நிறுவனமான தேசிய அனல் மின் கழகம் முன்வந்துள்ளது. 900 மெகாவாட் உற்பத்தித்திறனுள்ள நிலக்கரி அல்லது இயற்கை எரிவாயு அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையத்தை அமைப்பது தொடர்பான முன்வரைவை சிறிலங்கா அரசிடம் அந்நிறுவனம் கையளித்துள்ளது.

# முஸ்லிம் பிரதிநிதிகளை வெளியேற்றும் முயற்சி ஆரோக்கியமானதல்ல

## உலமா சபை எச்சரிக்கை

(கொழும்பு)


அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் முஸ்லிம் பிரதிநிதிகளை வெளியேறுமாறு கோரிக்கை விடுப்பது ஆரோக்கியமானதல்ல. ஒருமித்த செயற்பாட்டின் மூலமே உரிமைகளை வெல்லலாம் என உலமாசபைச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

சுனாமி அனர்த்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களுக்கான நிவாரண மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளைச் சிறந்த முறையில் முன்னெடுப்பதற்கான சூழல் உருவாகியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தில் இருந்து முஸ்லிம் தலைவர்கள் வெளியேறுவதோ அல்லது அவர்களை வெளியேறுமாறு வற்புறுத்துவதோ பாதிக்கப்பட்டுள்ள முஸ்லிம் சமூகத்திற்கு நன்மை பயக்காது என அகில இலங்கை ஜம்மியத்துள் உலமாசபையின் செயலாளர் மௌலவி அஸ்ஸெய்க் எச் அப்துல் நாஸா தெரிவித்துள்ளார்.

(32)

# தமிழீழ தேசியக் கொள்கைக்கு அமைய எதிர்காலத் திட்டங்கள் வரையப்பட வேண்டும்

## தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டுகோள்



ஒட்டுமொத்த தமிழீழ தேசியக் கொள்கைக்கு ஏற்ற வகையில் எதிர் காலத் திட்டங்கள் வரையப்பட வேண்டும்.இவ்வாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்ரமன் தெரிவித்தார். நேற்று கிளிநொச்சி திட்டமிடல் செயலகத்தி ் நடைபெற்ற வடக்கு கிழக்கு சுகாதார மேம்பாட்டில் அரச சார்பற்ற ந ுவனங்களின் பங்களிப்பை திரட்டும் ஓர் உள்ளகச் செயலமர்வின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் குறிப்பிடுகையில், எங்களுடைய வேலைத்திட்டங்களைப் பொறுத்த வரையிலே அதற்கான வளம் என்பது எமது பகுதிகளில் ஏற்கனவே இயங்கும் அரசாங்க சேவையிலுள்ள ஆளணிவளம் உட்பட சில வளங்களையும் எங்களுடைய மக்களுடைய பலத்தினையும் சர்வதேச மட்டத்திலே எங்களுக்கு கிடைக்கின்ற பலமும் இவற்றினடிப்படையிலே எங்களின் மக்கள் பலத்தினை முக்கிய தூண்களாகவும் அமைத்துக் கொண்டு அரசசார்பற்ற நிறுவனங்களால் கிடைக்கப்பெறுகின்ற பலத்தினையும் இணைத்து அதனோடு பல்வேறு பக்கங்களினூடாக கிடைக்கப் பெறுகின்ற உள்ளீடுகளைக் கொண்டு ஒட்டுமொத்தமான சுகாதார மேம்பாட்டை அடைவது என்கின்ற வடிவமைப்பை அமைத்து செயற்படுத்தவுள்ளோம். அந்த வகையிலே அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக கிடைக்கப்பெறுகின்ற வளங்களை கொண்டு எமது சரியான திட்டமிடலினூடாக செயற்பாடுகளை ஒழுங்கமைக்க முடியும். ஆகவே தமிழீழ தேசியக் கொள்கைக்கு ஏற்ற வகையில் எதிர்காலத்திட்டங்கள் வரையப்பட வேண்டும். இதில் நாங்கள் மிகவும் கவனமாக செயற்பட்டு வருகின்றோம் என்றார்.

இதேவேளை இச்செயலமர்வில் கருத்து வெளியிட்ட திட்டமிடலுக்கும் மேம்பாட்டுக்குமான செயலக பதில் பணிப்பாளர் ச.றஞ்சன் வடக்கு-கிழக்கு பிரதேசங்களின் திட்டமிடல்கள் தொடர்பாக முன்பு பல தடவைகள் கலந்துரையாடல்கள் நடைபெற்று அவை நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன. வடக்கு கிழக்கு பகுதிகளின் திட்டமிடல் தொடர்பாக கருதும்போது ஆழிப் பேரலையால் அழிவடைந்த பகுதிகளை கட்டியெழுப்பக் கூடிய நல்லதொரு சூழல் தற்போது ஏற்பட்டுள்ளது. திட்டமிடலைப் பொறுத்த வரையில் இரு விடயங்களாக பார்க்கவேண்டியுள்ளன. முதலாவது உடனடியாக செய்ய வேண்டிய திட்டமிடல், இரண்டாவது முழுமையாகச் செய்ய வேண்டிய திட்டமிடல் முதல் கட்டம் எனில் சர்வதேச உதவிகள் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளன.

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதிகளில் சுகாதார மேம்பாடுகளை எவ்வாறு செய்யப் போகின்றோம் என்பதையாவரும் கருத்தில் கொள்ளவேண்டும் பாதிக்கப்பட்ட பகுதிகளில் விரைவாக திட்டமிடல்களை மேற்கொள்வதன் ஊடாக வேலைதிட்டங்களை விரைவாக கொண்டு செல்லலாம். மாவட்ட ரீதியாக வேலைத் திட்டங்களுக்கான திட்டமிடல்களை விரைவுபடுத்தினால் செயற்பாடுகளை துரிதமாக்கலாம் ஆழிப்பேரலைக்குப் பின்னரான அபிவிருத்திக்கான வாய்ப்புக்களை சரியாக பயன்படுத்தினால் அபிவிருத்தித் திட்டங்களை வேகமாக முன்னெடுக்கலாம்எனவும் தெரிவித்தார்.

முற்பகல் பத்து மணியளவில் தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் விக்ரமன் தலைமையில் ஆரம்பமான இக்கலந் துரையாடலில், வடக்கு கிழக்கு அனைத்து பிரதேசங்களிலிருந்தும் பிரதி சுகாதார பணிப்பாளர்கள், தமிழீழ சுகாதார சேவைப் பிரதி நிதிகள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங் களின் சுகாதார செயற்பாட்டு உத்தி யோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். பிற்பகல் நான்கு மணி வரை தொடர்ந்து நடைபெற்ற இச் செயலமர்வில் அந்தந்தப் பகுதி சுகாதாரப் பணிப்பாளர்களும், பிரதிநிதிகளும் தமது பகுதி சுகாதார அபிவிருத் திக்கு எவ்வாறான திட்டங்கள் தேவைப்படுகின்ற தென்பதையும் அதற்கான வளங்கள் எவ்வாறு தற் போது கிடைக்கப் பெறுகின்றது என்பதையும் இனிவரும் காலங்களில் அவை எந்த அளவில் தேவைப் படுகின்றனவென்பதையும். தெரிவித்த அதேவேளை சுனாமி பாதிப்புக்குப்பின் சுகாதாரம் எந்த அளவுக்கு பின் தங்கியுள்ள தென்பதனையும் விளக்கினர் (ச,தீ)

# தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட மட்ட மாநாடு

கிளிநொச்சிமாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட மாநாடு எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் சு.பசுபதிப்பிள்ளை தலைமையில் அன்றையதினம் முற்பகல் பத்து மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டுமண்டபத்தில் தேசிய எழுச்சிப்பேரவையின் மாவட்ட மாநாடு நடைபெறவுள்ளது. கிளிநொச்சி மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் பேராளர்கள் அனைவரையும் மாநாட்டில் கலந்து கொள்ளும் வண்ணம் வேண்டப் பட்டுள்ளனர். (சோ)

# கவிஞர்புதுவை இரத்தினதுரை அவர்களின் "பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும்"

## வவு.வில் கவிதை நூல் அறிமுக விழா

(வவுனியா)

தமிழீழ கலைபண்பாட்டுக்கழகப்பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்களின் பூவரசம் வேலியும் புலுனிக்குஞ்சுகளும் என்ற கவிதை தொகுப்பு நூல் அறிமுகவிழா நேற்று வவுனியாவில் சிறப்புற நடைபெற்றது.

வவுனியா முத்தையா மண்டபத்தில் நேற்று மாலை மூன்று மணிக்கு இடம் பெற்ற மேற்படி நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசியல் துறை மகளிர் பொறுப்பாளர் அலை தேசியக் கொடி ஏற்ற நிகழ்வு ஆரம்பமானது. பொதுச் சுடரினை ஞானப்பிரகாசம் ஏற்றினார் விழா சுடர்கள் ஏற்றப்பட்டதுடன் ஆரம்பமான நிகழ்வை வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பளார் ஞானம் தலைமை தாங்கி நடத்தினார் நூல் வெளியீட்டுரையினை ஊடகவியலாளர் கனகரவி ஆற்றினார் தொடர்ந்து சிறப்புரையினை வவுனியா வளாக பீடாதிபதி நந்தகுமார் ஆற்றினார் நூலின் மதிப்பீட்டு உரைகளை முல்லைமணி வே சுப்பிரமணியம், தமிழ் அருவி சிவகுமாரன்,மற்றும் திக்வல கமல் ஆகியோர் ஆற்றினார்கள். கவிஞர் புதுவை இரத்தினதுரை அவர்கள் பதிலுரை ஆற்றினார்.

முதல் பிரதியினை தமிழக்காங்கிரஸைசேர்ந்த செந்தில் நாதன் பெற்றுக் கொண்டார் இந்த நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடி ஏற்றியமை தொடர்பாக இராணுவத்தினரும், பொலிசாரும் புகைப்படம் பிடித்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கு முறையிட்டதை அடுத்து போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரும் வந்து புகைப் படம் பிடித்து சென்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (21)

# இன்று வீரமுரசு நிகழ்வு

வீரமுரசு எழுச்சி நிகழ்வு மற்றும் மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வும் இன்று புளியம்பொக்கணை நாகேஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இன்று பிற்பகல் 5.00 மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் வண்ணம் விசுவமடு பிரதேச அரசியல்துறையினரும் தேசிய எழுச்சிப்பேரவையினரும் வேண்டியுள்ளனர். (சோ)

# பணத்தைப் பெற்றுக்கொள்க!

(அலுவலக செய்தியாளர்)

ஞானமுத்து குணசிங்கம் இல.242 சிவசுந்தரம் வீதி வட்டக்கச்சி என்பவரது பயண அனுமதி அட்டை, மற்றும் ஒருகுறிப்பிட்ட தொகைப்பணத்துடன் கிளிநொச்சி தபாலகத்திற்கு முன்பாகக் கண்டெடுக்கப்பட்டு கிளி. மாவட்ட தபாலதிபர் மா. பேரம்பலத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர் அலுவலக நேரத்தில் ஆதாரங்களுடன் சமுகம் கொடுத்து பெற்றுக்கொள்ளலாம். (சோ)

# இனவாதத்திற்கு எதிராக இன்று கொழும்பில் போராட்டம்

இனவாதத்திற்கு எதிராக இன்று பிற்பகல் கொழும்பில் போராட்டம் ஒன்று இடம்பெறவுள்ளது.மேல் மாகாண மக்கள் முன்னணி இதனை ஏற்பாடு செய்துள்ளது.புறக்கோட்டை ஐந்துலாம்புச்சந்தியில் இந்தப்போராட்டம் நடத்தப்படவுள்ளது. மேல் மாகாண மக்கள் முன்னணியின் உப தலைவர் குமரகுருபரன் தலைநகர் தமிழர்கள் இதன்போது தமது முழுமை ஆதரவை வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரியுள்ளார்.

இதேவேளை பொதுக்கட்டமைப்பு ஆதரவு தெரிவித்து இன்று மலையகப் பகுதிகளில் ஆதரவுப்போராட்டங்களை நடத்தவுள்ளதாக இலங்கைத் தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் செயலர் எஸ்.சதாசிவம் அறிவித்துள்ளார். (32)

### சிறிலங்கா...

மூன்று மணியளவில் 50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுவிக்கப்பட்டார்.நேற்றுப் பிற்பகல் இவரது வழக்கு சம்பூர் தமிழீழ நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்போது விடுதலைப்புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன், இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் திருமலை மாவட்டத் தலைவர் ஆர்தர் ட்வீய்டன் ஆகியோர் நீதிமன்றத்தில் சமுகமளித்தனர்.

கான்ஸ்டபிள் அமல் பிரசன்ன ஆஜர் செய்யப்பட்டவுடன் தமிழீழ காவல்துறை அதிகாரி எழுந்து கான்ஸ்டபிள் கைது செய்யப்பட்ட பின்னணியைத் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் கான்ஸ்டபிள் அத்துமீறிப் பிரவேசித்த போதே கைது செய்யப்பட்டதாகவும் இது தொடர்பாக விசாரணை நடைபெற்றுவருவதாகவும் அவரை ஆட்பிணையில் விடுவிப்பதற்கு ஆட்சேபனையில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதனையடுத்து நீதிபதி, கான்ஸ்டபிளை50 ஆயிரம் ரூபா ஆட்பிணையில் விடுதலை செய்வதாக உத்தரவிட்டார். அதனையடுத்து மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் எழிலன் கான்ஸ்டபிள் பிரசன்னவை போர்நிறுத்தக் காணிப்புக் குழுவின் திருமலைத் தலைவர் ஆதர் ட்வியட் டனிடம் ஒப்படைத்தார்.

அவர் கான்ஸ்டபிள் பிரசன்னவை அவரது குடும்பத்திடம் ஒப்படைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டார். (25)

# அமைதி, அபிவிருத்திப் பணிகளை இந்தியா உறுதியாக ஆதரிக்கும்

## வெளியுறவு அமைச்சு அறிவிப்பு

இலங்கையில் முன்னெடுக்கப்படும் அமைதிப் பேச்சுக்கள், அபிவிருத்திப் பணிகளுக்கு இந்தியா உறுதியான ஆதரவை அளிக்குமென இந்திய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் நவ்தேஜ் சர்னா தெரிவித்துள்ளார்

இலங்கையில் பொதுக்கட்டமைப்புச் செயற்படுத்தப்பட்டால் சனநாயக நடைமுறைகள் வலுப்படுமென இந்தியா நம்பிக்கை கொண்டுள்ளதாக புதுடில்லியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிட்ட போது குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய இலங்கைக்குள் அதன் பன்மைத் தன்மையைப் பிரதிபலிக்கின்ற வகையிலான தீர்வு ஏற்பட இந்தியா உறுதியாக உதவும் என்றும் நவ்தேஜ் சர்னா கூறினார். இலங்கையின் ஆளும் அரசிலிருந்து ஜே.வி.பி. வெளியேறியிருந்தாலும் கூட, ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சிறிலங்கா அரசு மேற்கொண்டு வரும் அனைத்து முயற்சிகளையும் இந்தியா ஆதரித்து வருகிறது என்றும் வன்முறைகள் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதை இந்தியா கடுமையாக எதிர்க்கும் என்றும் அவர் தெரிவித்தார். (32)

### யாழ்.இல்...

களைச் சேர்ந்தோர் கிளிநொச்சி கரடிபோக்குச் சந்திக்கருகில் உள்ள வடக்குக் கிழக்கு மனித உரிமை செயலகத்தோடு தொடர்புகொள்றுமாறு வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகத்தினர் கேட்டுள்ளனர். அத்தோடு021-2285986 எனும் தெலைபேசி இலக்கத்தின் மூலமும் இவர்களுடன் தொடர்பு கொள்ளமுடியுமெனவும் அச்செயலகத்தினர் மேலும் தெரிவித்துள்ளனர். (ச,தீ)

### போராளிகளுக்கு...

விசேட அதிரடிப்படைக்கு இந்தப் பொறுப்பைக் கையளித்தது என பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. பாதுகாப்பு வழங்குமாறு கூட்டுப்படைத் தலைமையகம் விடுத்த பணிப்பு நேற்று முன்தினம் காலையே விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்துள்ளது. கொக்கட்டிச் சோலையிலிருந்து கஞ்சிகுடிச்சியாறு பிரதேசத்திற்கு விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளை முஸ்லிம் பிரதேசங்களினூடாகவே அழைத்துச் செல்ல வேண்டும். நேற்று முன்தினம் கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டதால் போக்குவரத்துக்கள் சீர்குலைந்திருந்தன. இவ்வாறான சூழ்நிலையில் அவர்களை அந்தப் பிரதேசங்களினூடாக கொண்டு செல்லும் போது அவர்கள் ஆயுதக்குழுக்களினால் இலக்கு வைக்கப்படக் கூடிய வாய்ப்பு இருப்பதாகவும், அவ்வாறெதுவும் நிகழ்ந்தால் விடுதலைப் புலிகள் அந்தப் பொறுப்பை பாதுகாப்பு தரப்பினர் மீது சுமத்துவதற்கு இடமுள்ளதாகவும் விசேட அதிரடிப்படையினர் கூட்டுப்படை தலைமையகத்திற்கு அறிவித்துள்ளனர். இதனைக் கூட்டுப்படைத் தலைமையகம் ஏற்றுக்கொண்டு குறித்த தரப்பினருக்கு அறிவித்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### பாதுகாப்பு...

நலன்கள் தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதாகக் கூறியுள்ளார்.

இதேவேளை மத்திய தலைவர்களைச் சந்தித்து இலங்கைத் தமிழர்களுக்கு விரோதமான இந்த ஒப்பந்த முயற்சியை கைவிடவேண்டுமெனக் கேட்டுக்கொள்ள இருப்பதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். மேலும் இந்தப் போராட்டத்தில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றதாக கவிஞர் அறிவுமதி தெரிவித்தார். இப்போராட்டம் ஒரு அடையாளப் போராட்டம் என குறிப்பிட்ட அவர் மத்திய அரசாங்கம் வெளிப்படுத்தும் நிலைப்பாட்டை அடுத்து தமது அடுத்த கட்ட போராட்டம் முன்னெடுக்கப்படும் எனக் குறிப்பிட்டார். சீன மற்றும் ஏனைய நாடுகளின் வானூர்திகளைப் பார்த்து பயப்படாத சிங்களவர்கள் வன்னியில் பறக்கும் அனைத்தையும் பார்த்து பயப்படுவதைக் வியப்பை விட வேடிக்கையாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.சென்னை சேப்பாக்கம் அரசு விருந்தினர் மாளிகை எதிரில் நேற்று முற்பகல் பத்து மணிக்கு ஆரம்பமாகிய இந்த உண்ணாநிலை அறப்போர் மாலை ஐந்து மணிக்கு நிறைவடைந்தது.விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செய லாளர் தொல். திருமாவளவன் தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன், அகில இந்திய மூவேந்தர் முன்னேற்றக் கழகத் தலைவர் மருத்துவர் ந. சேதுராமன், தமிழ்த் தேசியக் கட்சிப் பொதுச் செயலாளர் தணிக்கையாளர் இளமுருகன், புதுக்கோட்டை பாவாணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ் முழக்கம் சாகுல் ஹமீது, முகம் மாமணி, சந்திரேசன், இறைக்குருவனார், சோழநம்பியார், புதுவை மணிகண்டன் உட்பட்டோர் கண்டன உரையை நிகழ்த்தினர்

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூன் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது